


# நட்பின் பேரழகன் 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SEASON 2020-21

To Genga

Happy 70th Birthday, we hope you have a fantastic day!

Best Wishes from all the Staff and Players at LFC

**YNWA**

Alisson Becker · Sadio Mane · Mohamed Salah · Adrián


Georginio Wijnaldum · Jürgen Klopp · Virgil van Dijk · Joe Gomez

James Milner · Roberto Firmino · Jordan Henderson · Divock Origi · Joel Matip · Fabinho

Naby Keita · Alex Oxlade-Chamberlain · Takumi Minamino · Trent Alexander-Arnold · Curtis Jones · Andy Robertson

Xherdan Shaqiri · Rhian Brewster · Harvey Elliott · Sepp van den Berg · Caoimhín Kelleher

Standard Chartered · AXA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகலிங்கம் சிறீ கெங்காதரனின்
எழுபதாவது அகவைப் பூர்த்தியை முன்னிட்டு
21.12.2020ல் லண்டனில் வெளியிடப்பட்டது.

# நட்பின் பேரழகன் 70

7 Blackfen Road, Sidcup, Kent, DA15 8QD, UK

Printed by: Setline data Ltd, Arches 72- 74,
878 Old Kent Road,London SE15 1NQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெங்காவுக்கு அகவை 70

கெங்கா எழுதிய 'வயற் காற்று' என்ற புத்தகத்துக்கு மறைந்த மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு பொ கனகசபாபதி அவர்கள் எழுதிய அணிந்துரையிலிருந்து சில பகுதிகளைக் கெங்காவின் 70 வது பிறந்த தினத்துக்கு சமர்ப்பிப்பது சாலப் பொருத்தமாகும்.

"தெல்லிப்பழை எப்படி ஒரு அதிசயக் கிராமமோ, அப்படியே சிறீ கெங்காதரனும் ஒரு அதிசயப் பிறவி. அவருக்கு நாளொன்றில் எத்தனை மணி உள்ளது என்றால் தெரியாது. அவருக்கு நாளென ஒன்று இருப்பதே தெரியாது. அப்படிப்பட்ட உழைப்பாளி.எங்கெங்கு நல்லன நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் இருப்பார். இருப்பார் என்பதிலும் உழைப்பார் என்பதே மிகப் பொருந்தும். குறுகுறுக்கும் அவர் மனது ஏதாவது செய்யவேண்டும் என தவித்த வண்ணமே இருக்கும். அவரின் பேரதிஷ்டம் அவருக்கு கிடைத்த மனைவி ஜெயகௌரி. கணவர் மகாஜனாவுக்கு அருகே அதன் காற்றை சுவாசித்தபடி என்றால், இவர் யூனியனுக்கு அருகே அதன் காற்றை நுகர்ந்தபடி இருந்தவர். இருவருமே இன்று தமது பாடசாலைகளுக்காக அரும்பணியாற்றுகின்றனர்.

தெல்லிப்பழையைப் பற்றி, அதன் சிறப்பைப் பற்றியும் சிறப்பாக எழுதுவதற்கு சிறீகெங்காதரனிலும் பார்க்கச் சிறந்தவர்கள் இருத்தல் சாத்தியமில்லை. நான் இதனை வெறும் புகழ்ச்சிக்காகச் சொல்ல வில்லை. அவர் தகுதி கண்டே கூறுகிறேன். மகாஜனக் கல்லூரியில் கற்கும்போது சாரணியத்தின் தலைவராகவும், இராணிச் சாரணராகவும் இருந்ததோடல்லாமல் அம்பனைக் கலைப்பெரு மன்றத்தையும், சூட்டிங் ஸ்ரார் விளையாட்டு கழகத்தையும் நண்பர்களுடன் சேர்ந்து ஆரம்பித்து சிறப்புடன் இயக்கியவர்.

ஐக்கிய முன்னணி அரசுடன் பொதுவுடைமைக் கட்சி இருந்த காலத்திலேயே காங்கேசன்துறை அபிவிருத்தி சபையின் செயலாளராகவும் யாழ் பிராந்தியத்தின் உதவிச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்."

1987ம் ஆண்டு ஐக்கிய இராச்சிய மகாஜன பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பிப்பதற்கு முன்நின்று உழைத்த- தொடங்கிய பெருமை திரு சிறீகெங்காதரனையே சாரும்.அத்தோடு ஒன்பது வருடங்கள் செயலாளராகவும் , தலைவராகவும், தற்போது காப்பாளராகவும் செயற்படுகிறார். இன்று வரை மகாஜனப் பழைய மாணவர் சங்கத்துக்காக உழைத்துக் கொண்டே இருக்கும் சிறீகெங்காதரனுக்கு அகவை 70 என்பதை நம்ப முடியவில்லை.

70ம் அகவையில் காலடி வைக்கும் கெங்காவுக்கு மகாஜன பழைய மாணவர் சங்க தலைவராகவும், நிர்வாக சபையின் சார்பிலும் எங்கள் பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

வெல்லுக மகாஜன மாதா!

**வீ தவமுருகநாதன்**
தலைவர்,
மகாஜனக் கல்லூரி ப.மா.ச. (ஐ.இ.)
21. 12. 2020

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதனை...
# இதனால்... இவன்...

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்னும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க
திரு. கெங்காதரன் அவர்களிடம் ஒரு செயற்றிறன் எப்போதும்
இருந்துகொண்டே இருந்தது. அதுவே அவரின் சிறப்பும்கூட.

தனது சிறுபராயம் தொட்டு பொது வேளைகளில் ஈடுபாடுகொண்ட இவர்
இடதுசாரிக் கருத்தின்பால் ஈர்க்கப்பட்ட ஒரு செயற்பாட்டாளர்.

சமகாலத்தில் வாழும், மகாஜனக் கல்லூரியோடு நெருங்கியவர்களுள்
பாடசாலையின் வரலாற்றை முழுமையாக அறிந்தவர்கள் ஒரு சிலரே.
அவர்களுள் திரு. கெங்காதரன் முக்கியமானவர். குறிப்பாக பாடசாலையின்
உதைபந்தாட்ட வரலாறு அவருடன் இரண்டறக் கலந்திருக்கிறது.
பாடசாலையின் மிக நெருங்கிய அயலவராக அவர் வாழ்ந்ததும்
பாடசாலையோடு அவர் இரண்டறக் கலப்பதற்கு முக்கிய காரணமாக
இருக்கிறது. மகாஜனா என்பது எப்போதும் அவரது சுவாசமாகவே இருக்கிறது.

பிரான்சில் எமது சங்கம் உருவாவதற்கு திரு. கெங்காதரன் அவர்களும்
ஏதோவகையில் உந்துசக்தியாக இருந்திருக்கிறார் என்பதும்
பதியப்படவேண்டிய ஒன்று. ஆரம்ப காலங்களில் எமது சங்கத்துடன்
நெருக்கமாக உறவாடி எமது நிகழ்வுகளில் பங்குபற்றி
ஊக்கமளித்தமையை அவரது இந்த எழுபதாவது அகவை நாளில்
மகிழ்வுடன் நினைவுகூருகிறோம்.

எழுபது வயது சிலருக்கு மட்டும்தான் முதுமை. செயற்பாட்டாளர்களுக்கல்ல.
எப்போதும் இளமைத் துடிப்புடன் இயங்கிக்கொண்டிருக்கும்
செயல் வீரர் திரு. கெங்காதரன் அவர்களை நாமும் வாழ்த்துவதில் மகிழ்வடைகிறோம்.

வெல்லுக மாகாஜன மாதா!

**மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்,**
**பிரான்ஸ்**
06.12.2020

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA

## மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

(Registered as a non profit organization in Canada. No:001100556)


***Patrons:***
Dr. Shun Sunder
Mr. S. Subramaniam
Mr. K. Thuraisingam
Mr. W. Ranjan
Mr. T. Iswarakumar
Mr. N. Jeganathan
Mr. N. Santhinathan
Mr. K. Jeyandran

***President:***
Mr. C.Buvanasandra
*president@mahajanan.org*
(416) 414-7752

***Vice President:***
Mr. T.Vijayakumar

***Secretary:***
Mr. N. Thanapal
*secretary@mahajanan.org*
(416) 418-9036

***Asst. Secretary:***
Mrs. R.Sampavalingham

***Treasurer:***
Mr. M. Sivakumaran
*treasurer@mahajanan.org*
(416) 269-0282

***Asst. Treasurer:***
Mr. K. Indukumaran

***Committee Members:***
Ms. R.Ambuja
Mr. S.Arulanantharajah
Mr. K.Balaskanthan
Mr. V. T. Mahalingam
Ms. Y.Malathy
Mr. S.Radheepan
Ms. J. Rajitha
Mr. R.Ravindran
Ms. V.Sakunthaladevy
Mr .S.Sivakumar
Mr. K.Sivathasan
Mr. M.Thiruketheesan
Ms. A.Yasotha
Ms. P.Yasotha
Mr. N.Yogathas


December 8, 2020

Mr. Nagalingam Sri-Gengatharan

History witnesses the emergence of personalities whose monumental achievements in maintain the name of Mahajana college in the international arena. Mr Nagalingam Sri-Gengatharan, is one of such outstanding personalities whose contributions are multidimensional. Over his lifetime, he has actively participated and dominated in setting up the Old Students Association of Mahajana College in United Kingdom and presided and guided the Association for long time. As a President of the Mahajana College Old Student Association–UK, he was instrumental for several historical achievements of our sports teams, cultural events and related activities .

As a neighbor of our college campus, we remember his whole family was involved with the legacy of the College.

We, the **MAHAJANANS** in Canada are wishing, Mr Nagalingam Sri-Gengatharan a joyous seventieth birthday anniversary and remembering his contributions to the college and the Old Students Association. Happy seven decades of a life well lived.

May this 70th birthday give **Genga** endless love, happiness and a lot to look forward to. He is a legend and we love celebrating him.

*C. Buvanasandra*
***President***


*3852 Finch Avenue East, Unit G03, Scarborough, Ontario, M1T 3T9, Canada*
+1.647.849.2507 www.mahajana.ca Mahajana Osa Canada

Mr Srigengatharan comes from a sports loving family. He has an immense ability to recall Mahajana's sports history in detail. He is an ardent supporter of soccer. In 1980s Genga was one of the founding member of Mahajana College U.K. O.S.A. He loves to honour our College's famous sportsman through U.K O.S.A.

His brother Ravi started to play soccer in 1966 with Mahajana College's third eleven soccer team. His team won the Championship that year and the consecutive year.

My hearty congratulations and best wishes to you Genga on your 70th birthday. May god bless you and your family with good health and happiness

**S.T.Sampanthar**
1964 Mahajana soccer captain
O.S.A Melbourne Australia

# Wish you a many happy returns of the day

I am sending this message to you with great pleasure for the high regards you have towards me. The god Almighty will bestow his blessings on you for a happy bright future. I can never forget the high regards you have towards my family. Please convey my sincere wishes to your family, brothers and sister. The longevity of the soul depends on the prosperity of life.

**Mrs. Kanageswary Sinnathamby**
**Rtd. Teacher Mahajana College, Tellippalai**

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

om murugu

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO: 271097
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON E12 6AF
TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407
www.londonsrimurugan.org



## வாழ்த்து செய்தி

வணக்கம்

பெருமதிப்பிற்குரிய,

அன்பு நண்பர் திரு நாகலிங்கம் ஸ்ரீ கங்காதரன் அவர்கள் தன்னுடைய **70**வது பிறந்த தினத்தை கொண்டாடுவது அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த **30** ஆண்டுகளுக்கு மேலாக என்னோடு நெருங்கி பழகி வரும் இவர் நல்லதொரு பண்பாளராகவும் அன்பு உள்ளம் கொண்டவராகவும் வாழ்ந்து வருபவர். இலங்கை யாழ்ப்பாணம் தெள்ளிப்பளை மஹாஜனக் கல்லூரியின் சேவைகள் வாயிலாக கல்விப்பற்றோடும், லூஷியம் சிவன்கோயில் ஸ்தாபக தர்மகர்த்தா என்ற வழியிலே தெய்வீகப்பற்றோடும், தமிழ் பாடசாலைகள் விளையாட்டு கழகம் லண்டனில் அமைந்திட பாடுபட்ட முறையில் சிறந்த விளையாட்டு பற்றோடும், தாய்நாட்டுக்காக நடைபெற்ற போராட்டங்களில் ஈடுபட்டு நாட்டுப்பற்றோடும், தமிழ் பத்திரிக்கை துறையில் அமரர் சிவானந்த ஜோதி அவர்களுக்கு பல்வேறு உதவிகள் புரிந்து தமிழ்ப்பற்றாளராகவும் நற்செயல் வீரராகவும் விளங்கி வருபவர் திரு ஸ்ரீ கங்காதரன் அவர்கள்.

**"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க மனிதப்பிறவிக்கான கடமைகளை செவ்வனே புரிந்து இனிய குடும்பத்தோடு இல்லற வாழ்க்கை வாழ்ந்து மனித நேயத்தோடு மற்றவர்களுக்கு உதவி புரிந்து கடமை உணர்வோடு உற்றார் உறவினர்களை பாசத்தோடு அரவணைத்து **"மக்கள் தொண்டே மகேசன் தொண்டாக"** வாழ்ந்து வரும் சமய சமூக சேவா மாமணி திரு நாகலிங்கம் ஸ்ரீ கங்காதரன் அவர்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் நீடுவாழ் நாளும் நிறைந்த புகழும் பெருமையும் பெற்று மனைவி மக்கள் மற்றும் உற்றார் உறவினரோடு பல்லாண்டு வாழ்ந்து பெருமை பெறவேண்டி எல்லாம்வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்
சீனி. சம்பத்குமார்
தலைவர்
இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயமான சிறீகெங்காதரன்

மிக ஜெயம் பலவோங்க வாழி வாழி

தாகமா தமிழை தாங்கியே
தகும் சமூக ஆர்வனாய்
வேகமா செயல னைத்தேகும்
வெகு துடிப் பானவராய்
நாகலிங்க சிறீகெங் காதரன்
நலமா அகவை எழுபதில்
யோகமா வாழ்வு பெற்றே
யுகம் போற்ற வாழிவாழி

மரபுகளை மதிக்கும் மாண்பும்
மற்றவர் உதவிக்கு முனைப்பும்
அரசியல் ஆர்வமும் அர்த்தமாய்
அன்பு நண்பர்கள் பலருடைய
தரமான மகாஜனக் கல்லூரியின்
தகும் மறுபெயரே இவராக
வரமான வளமோடு என்றுமே
வாழிய சிறீகெங்காதரனேவாழி

ஜெயகௌரி கரம்பற்றி வாழ்விலே
ஜெயம் பலவும் பெற்றேகி
நயமான ஜனகன் மகனுமாக
நல்ல வாழ்வை மேலோங்க
உயர்வான எழுபதாம் அகவையில்
உற்ற உறவினர் நண்பரோடு
ஜெயமாக சிறீகெங் காதரனேமிக
ஜெயம் பலவோங்க வாழிவாழி

நல் ஆசியோடு

துன்னையூர்
**ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்**

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனங்களின் மாநேசன்

**கதிர் பாலசுந்தரம்**
**ஓய்வுநிலை அதிபர், யூனியன் கல்லூரி**

*எழுபது அகவை காணும் என் இனிய அருமைத் தோழரே!*
*மனிதகுல மேன்மையை சதா நெஞ்சில் தாலாட்டி மகிழும்*
*அம்பனை அரவணைத்து வளர்த்த பொன்னான பெருமகனே!*
*திரு. நாகலிங்கத்தின் செல்வத் திருமகனே ஸ்ரீகெங்காதரனே!*
*வையகம் ஏற்றிப் போற்ற என்றென்றும் வளமுடன் வாழ்க!*

நான்,
புகழ் பூத்த பெரும்பதி தெல்லிப்பழை வட்டத்துக்கு புது மணமகனாக மருமகனாக வந்தவன். முன்னர் பழக்கம் ஏதுமில்லாத தோழர் ஸ்ரீகெங்காதரனை வீமன்காமம் வடக்கில் உள்ள எனது வீட்டு முற்றத்தில் ஒரு மங்கு பொழுதில் பார்த்தபொழுது, அவர் ஒரு காசோலையை நீட்டினார். நான் எனது வீட்டை நவீனப்படுத்தக் கடனுக்கு விண்ணப்பம் செய்திருந்தேன். யாழ் கச்சேரியில் கடமைபுரிந்துகொண்டிருந்த ஸ்ரீகெங்காதரன் அதனை எடுத்துவந்திருந்தார். 1980இல் லண்டனிலிருந்து தெல்லிப்பழைக்குத் திருமணததிற்காக வந்திருந்த சமயத்தில் யூனியன் கல்லூரி அதிபர் அலுவலகத்துக்கு, தன் உடன்பிறப்புக்கு உயர் வகுப்பில் கல்வியைத் தொடர அனுமதி வழங்கியதற்காக நன்றி சொல்ல வீடு தேடி வந்திருந்தார். பின்னர் லண்டனில் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவுக்கு, பிரதம விருந்தினராய் அழைத்துக் கௌரவித்தார். இந்த உத்தம பெருமக்களது பெருந்தன்மைகள் கருவோடு பூமிப்பந்தில் இறக்கஞ் செய்யப்படுபவை. அவற்றை அவரது அயராத இடதுசாரி ஈடுபாடு மேலும் மேலும் தீந்தணலில் புடம்போட்டு, அவரை ஒரு சமூக அக்கறை நிறைந்த அற்புதமான மகாஜனங்களின் நாடறிந்த நேசனாய் வளர்த்திருப்பதை, அவரின் நீண்ட தொடர் செயற்பாடுகளில் காண்கின்றேன்.

இன்னொருபுறத்தில், அரசியல் அரங்கில் முதிர்ச்சி கண்ட சிந்தனையாளனாகக் காட்சி தருகின்றார். யாழ் அரசியலில் என்றும்தடுமாறாச் சாணக்கினாய் என்பார்வையில் சதா நிலைகொண்டு வாழ்கின்றார். முகநூலில் தொடர்ந்து காட்சி தரும், 'என் வாழ்வும் நான் சொல்லும் கதைகளும்' கட்டுரைகள் யாழ் அரசியல் ஏற்ற இறக்கங்களை துல்லியமாய் பேசுகின்றன. ஆழமான செய்திகளை பேசும் அவை நூல் வடிவம் பெறவேண்டும். எதிர்கால சந்ததிகளுக்கும், அரசியல் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயன் தரும் பொக்கிசங்கள்.

ஒன்பது வயதில் திறப்புச் சின்னம் பதித்த சிவப்புக் கொடியுடன், தந்தை வழிகாட்டலில் வாக்காளரைச் சந்திக்க, கம்யூனிஸ்ட் வேட்பாளர் காராளசிங்கத்துடன் ஆரம்பித்த பயணம், இன்றும் அவரோடு தொடர்வதைப் பார்க்கின்றேன். தோழர் வி. பொன்னம்பலம் தேர்தலில் வெற்றிகாணவேண்டும் அல்லதாயின் கூடிய எண்ணிக்கையான வாக்குகள் பெறவேண்டும், என்று தம்மை அர்ப்பணித்து உழைத்தவர்களில் முதன்மையானவர். அதனால் அம்பனைக்கும் அதன் சுற்று வட்டாரத்துக்கும் , தென் இலங்கைப் பிரபல இடதுசாரி அரசியல் தலைவர்களை அறிமுகம் செய்த பெருமைக்குரியவர். கம்யூனிஸ்ட் தலைவர்களான விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன். வி.பொன்னம்பலம், எம்.ஜி.மெண்டிஸ் ஆகியோரை, சிரமேற் சுமந்து அரசியல் புரிந்தவர். கம்யூனிசம் கெங்காவின் நரம்புகளில் சிரம்சீவியத்துவமாய் ஜீவியம் செய்கின்றது. கம்யூனிஸ்ட் இளைஞர் அணி யாழ் குடாநாட்டில் எழுச்சி பெறுவதைக் கண்டு உள்ளம் பூரித்தவர். கம்யூனிஸம் தமிழ் மக்களின் சகல அரசியல் நோய்களுக்கும் மருந்தாய் அமையும் என்று திடமாய் நம்பியவர். அது நிறைவேறவில்லை என்று கட்சி தாவாத பெருமகன். அழகிய கம்யூனிச தேவகன்னியரின் கடைக்கண் வீச்சுக்களுள் அமிழ்ந்து ஆனந்தமாய் நீந்துகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பணிகளோடு மட்டும் மானிட நேயர் ஸ்ரீகெங் காதரனின், மக்கள் சேவை சார்ந்த பணிகள் மங்கி மறைந்து போகவில்லை. அம்பனையின் கலை, மதம், சிந்தனை சார்ந்த துறைகளிலும், 70ஆம் பத்து ஆண் டுகளில் அம்பனையில் நிகழ்ந்த புது மலர்ர்ச்சிக் காலத்தில், அவற்றின் சாதனைகளுக்காக உழைத்தவர்கள் வரிசையில் முதன்மையானவர். அரங்கேற்றிய நாடகங்கள் சென்ற இடம் எல்லாம் சகல போட்டிகளிலும் தங்கப் பதக்கங்கள் பெற்றன. தைப்பொங்கல் காலவேளையில் கலைப்பெருமன்றம் நடாத்திய உழவர் திருவிழாக்கள் கோலாகலமாய் முன்னெடுக்கப்பட்டன. ஞானவைரவர் ஆலயத்தில் ஆண்டுதோறும் கார்த்திகைத் தீபத் திருவிழாவும், திருவெம்பாவை விழாவும் சிறப்பாய் நடைபெற்றன. இவை என்றென்றும் சமூக நேயர் தோழர் நாகலிங்கம் ஸ்ரீகெங் காதரனின் நாமத் தை அம் பனை வரலாறு முழவதும் ஓயாமல் உரத்துப் பேசும்.

●

தெல்லிப்பழையின் தேனழகு பொங்கும் புகழ் பூத்த
அம்பனைக் கிராமத் தின் அருமையான அரசியல் சிந்தனையாளரே!
அர்ப்பணிப்புகள் ஆயிரமாயிரம் புரிந்த,
அரசியல் வாழ் வியல் பூத்துக் குலுங்கும்
மாமனிதராய் மிளிர்கின்ற மாணிக்கத் தோழரே,
உயர்திரு நாகலிங்கம் சிவகெங்கை தம்பதிகளின்
சீர்மிகு செல்வச் சிரேஷ்ட புத்திரனே,
இனிய அரிய என் தோழர் ஸ்ரீகெங்காதரனே!
ஐஸ்வரியங் கள் அனைத்தும் நிறைவாய் பெற்று
பேரும் புகழும் பெருநிலத்தில் ஓங்கி யொலிக்க
ஆன்றோர் பெரியோர் ஆசிகள் அள்ளி வழங்க
சுற்றம் சூழ்ந்து நின்று நித்தம் ஆலவட்டம் வீச
வாழ்க! நல் வளமுடன் வாழ்க பல்லாண்டு!
அருள்மிகு அம் பனைக் குலதெய்வம் ஞானவைரவர் -
பளபளவென ஜொலிக்கும் பாங்கான வெள்ளித் தேரில்
உயர் நீல வான வெளியில் உன்னதமாய் பவனி வந்து
நறுமணம் கமழும் இராச மல்லிகை மலர்கள் தூவி
“மகாஜனங்களின் நேசனே ஸ்ரீகெங்காதரனே நீ வாழ்க!
பூவுலகம் பூச்சொரிந்து வாழ்த்தப் பல்லாண்டு வாழ்க!!”
என்று ஆசிகூறி பல்லாயிரம் தடவைகள் வாயார வாழ்த்த,
என்றென்றும் நிறைமகிழ்வுடன் வாழ்க பல்லாண்டு!

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Nagalingam Srigengatharan - Genga

Genga was born and brought up in a village close to my village Viliciddy which is south west of Tellippalai, I have seen him as a younger boy in Mahajana College and in the house of Mr Krishnar who lived in the house adjoining western fence of Mahajana College .The college used to share the water from a well which was on the boundary of the college.

I first met Genga as a young man in London when the founders of Mahajana College Old Students association met in India House in Holborn in 1989. Genga was very enthusiastic and keen to form the organisation and support the old College in various ways .He joined the committee who elected me as chairman .For some time we used to meet monthly and Genga was very prompt to arrive on time and helped in various ways to run the meetings.

Genga loved sports. He was interested in supporting Mahajana College Tellippalai by improving facilities for sport .He believed that the school will find funds from various sources for curricular education but for sports we needed to take extra interest and help. He managed to convince majority of committee members and for a few years Mahajana OSA supported sports facilities in the College back in Tellippali.

Genga took active interest in Mahajana College annual open days and promoted sports there too. Jaffna Schools sports association ran success fully and Genga promoted it. Later he was one of the founders of Tamil Schools Sports association which running successful annual events. Genga is a true socialist .He claims to be member of the Communist Party .He was an ally of Mr V Ponnampalam .I am aware that he believed in socialism and communism so much so that he would support Singhalese communists in national elections.

He was a keen community worker and would volunteer to help people in difficulty .One would see him in many funerals and also helping sick people. I remember seeing him helping Mr E Rasanayagam by visiting and supporting him a lot. In conclusion I would sum up Genga as a kind, good hearted person with honesty and intergritty I wish that he lives for many years to serve his family and the community at large.

He is a good friend whom one can trust.

**Dr S Navaratnam**
**Patron, Mahajana OSA, U.K.**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Congratulate Srigengatharan for his 70th Birthday

I have associated with Gengatharan, fondly referred to as Genga, for the last 30 years because we both are old students of Mahajana College.

Genga is one of the founding members of Mahajana Old Students Association UK and he is always holding important positions. Genga's wisdom and humour were always present at Mahajana's OSA meetings which were sometimes conducted with high emotion. Genga's sensible and calm nature kept the meetings on track contributing to the association functioning well all these years.

Genga was the architect and driving force behind Tamil Schools Sport Association UK staging the annual sports event successfully for the last 25 years. Even though he does not participate in any sport, Genga's leadership qualities, organisation, and management skill kept the TSSA going. Genga is well known as a good Tamil extempore orator and he is invited to speak at most of the notable functions- celebrating birthdays, honouring achievements and, above all, celebrating the life of celebrities. Although he was a follower of Ponnambalam, the communist party candidate in Sri Lanka, I have witnessed him participating in most of the Saiva rituals in Temples, weddings, and funerals as an ardent Saivite.

On behalf of myself and family, I congratulate you Genga, on your 70th Birthday and pray at Highgate Temple to Lord Murugan that you will live to celebrate your centenary birthday.

**Appathurai Vairavamoorthy**
**Patron, Mahajana OSA, U.K.**

●●●

## நீக்கமற அன்பு கொண்ட உண்மையான மானிடன்: கெங்கா அண்ணை!

*அரசியலில் மக்களை நேசிக்கும் இடதுசாரி*
*கல்வியை விடவும் சமுகத்தில் கற்றுக் கொண்டது மிக அதிகம்*
*தனது கிராமத்தின் மீதும் தனது பாடசாலை மகாஜனா மீதும் கொண்ட பற்று அதீதமானது*
*தனது உறவினர் மீது கொண்ட அன்பு அலாதியானது*
*தனது நண்பர்கள் மீது கொண்ட அன்பு மாசற்றது*
*தனது குடும்பத்தின் மீது கொண்ட வாஞ்ஞை நீக்கமற்றது*
*இவை எல்லாவற்றைக் காட்டிலும் மிகச்சிறந்த மனிதநேயனாகவும் உன்னதமான*
*சமூகவியலாளனாகவும் கெங்கா அண்ணாவைக் காண்கிறேன்.*
*கெங்கா அண்ணன் இன்னும் பல பிறந்தநாட்களைக் காண எங்கள் குடும்பத்தின் வாழ்த்துகள்!*

**சி ராதாகிருஷ்ணன்**
*முன்னாள் தலைவர், ம.ப.மா சங்கம், பிரான்ஸ்*

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best wishes to Genga

The only reason I was able to meet and to know about the great Mr Nagalingam Srigengatharan is Mahajana College. We were privilege to study at this great College. All Mahajanans are proud of their college

I met him first at Dr Poobalasingam's house in Whetstone, Barnet to discuss about forming Mahajana College Old Student Association in UK. We formed the Association in 1987 and our friendship and understanding of each other grew from that day. He wanted to improve the standard of education and sports in Mahajana College and hoisted it back to its glory days in the sixties to eighties.

He had a vision to form organisations which will help our community and future generations in various ways in UK. To name a few organisations he was part of it are Mahajana College OSA, Jaffna School Sports Association, Lewisham Sivan Kovil. These organisations with his untiring efforts have grown from strength to strength. He was the secretary and president of Mahajana College OSA UK and now a patron. Founder member of TSSA and was president of TSSA.

He is a very political minded person. He always defends his beliefs and had endured to achieve them. But the political geography in Sri Lanka didn't allow him to progress his vision. Even though he had connection with the Bandaranayakes, Peter Kenamen, V Ponnampalam and other socialist MPs, they could not convince the entire country to embrace their vision. They failed to understand the individual need of the people of Sri Lanka.

His knack of understanding others is great. He is principled and willing to work for a goal. He has his own enemies and also he has die hard friends. His brothers and sisters are his great strength. He loved and they in turn loved him as well.

I have learned a lot about Mahajana College achievements in studies and sports. He seeks my help and in turn he too has helped me.

He is the person who send me the link to apply for volunteering at the 2012 Olympics held in London. Both my daughters Manjula and Nila applied for it and they were part of the opening and closing ceremony. Nila had the privilege to carry the Great Britain banner standing in front of Team GB and side by side with Sir Chris Hay at the opening ceremony and walking next to Sir Ben Ainslie carrying the union jack. I am always indebted to Genga. This is known as Mahajana Connections

He is a very good orator in Tamil and he has very good knowledge on many topics. I have heard him speak at many occasion and he always keep it to the point. His special quality is he doesn't mix politics with organisations matters.

Like everyone Genga is also getting old and he has reached the right age of Seventy

My birthday wishes. Happy seventieth birthday Srigengatharan. You may live long to see a brighter future of mankind.

Best wishes and bright future

**G Natkunan**

Patron, Mahajana College OSA UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy 70th Birthday

On the significant occasion of reaching another milestone in life, the 70th Birthday, it gives me great pleasure to extend my warm congratulations and best wishes to Genga. Wishing you good health and strength to continue your social work to the community.

I have known Genga and his family since childhood. We were from the same village, family friends and fellow Mahajanans. Genga has so many good qualities I admire and respect. His social work started from the school days in Sri Lanka. He was instrumental in setting up 'Shooting Stars, a sports club and 'Kalai Peru Mantram' a cultural organisation in Ampanai, Tellippalai. Cricket, football matches, dance and music festivals were organised in the village.

Genga's family lived next door to Mahajana College premises in Tellipalai. He is proud and passionate about Mahajana, committed and dedicated to promote and preserve Mahajana's excellence through out the world. Genga was the architect in forming the Mahajana Old Students Association in UK. I had a close association with Genga in the committee since it was formed in 1987. He has been serving in the Executive committee since it was formed, four years as assistant secretary, twelve years as the Secretary and as the President during the centenary year of the school. We worked very closely during my four years as Secreatary and six years as President. He worked tirelessly hard with the members to develop the OSA as one of the leading organisations. It was not easy to organise events in those years. The ICT facilities which we enjoy now were not available then. Yet, sports, dramas, music/ dance programmes, open days, magazines, news letters were all organised during the early years of the organisation. They were very successful and enabled us to help the school during the trouble times back home.

Genga is involved in several organisations and a well known popular person in Lewisham. He is not a religious person but respects all the faiths, people and their way of life. He attends all the social occasions, programmes, weddings and funerals in the community. He is an exceptional person who has contributed a great deal to the community. I admire mostly his quality of respecting and working with those whose views are entirely different. We must also thank his wife Gowri and his extended family members for supporting his work for the community.

Keep up the good work and enjoy your later years of life. Many happy returns of the day.

**W.Thayalan**
Councillor and Former Mayor
Royal Borough of Kingston upon Thames

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர்

இன்று 70வது அகவை நிறைவை தனது உற்றார், உறவினர்கள், நண்பர்களுடன் மகிழ்வாக கொண்டாடும் கெங்காவை யான் சந்தித்த நாள் தொடக்கம் 'கெங்கா' என்று நட்பு உரிமை பாராட்டி அழைப்பேன்,அவரும் அதே உ ரிமையுடன் எப்பொழுதும் அன்புடன் 'இராம்' என்று தான் அழைப்பார்.
ஆகவே தான் இவ் வாழ்த்து செய்தியை 'நண்பர்'என ஆரம்பிக்கின்றேன்

யாம் இருவரும் சம காலத்தில் மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்று இருந்தாலும் என்னிலும் வயதில் இளையவர் என்ற படியாலும் அவருடைய ஒன்றுவிட்ட அண்ணர் விமலனும் யானும் பாலிய நண்பர்கள் என்ற காரணத்தினலாயோ அல்லது மாறுபட்ட அரசியல் கொள்கைகள் காரணமாகவோ, அல்லது யான் சமயச் சேவையாளராகவும்,அவர் சமூக சேவையாளராகவும் சேவைகள் ஆற்றி வந்தமையாலோ அக்கால கட்டத்தில் அவருடன் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை, எனினும் நானும், அவரும் இலண்டன் வந்த பிறகும் கூட யாமிருவரும் சந்திக்கவோ, பழக கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை. ஆனால் நாமிருவரும் கல்வி கற்ற மகாஜனக் கல்லூரிக்கு பழைய மாணவர்களாகிய நாங்கள் எந்த வகையில் உதவி செய்ய முடியும் என்ற உன்னத நோக்கம் எம் இருவருக்கும் இருந்தபடியால் தான் 1987ம் ஆண்டில் அவருடைய சிந்தனையில் உதித்தது தான் இன்று 33 ஆண்டுகளை நிறைவு செய்து இலண்டனில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட பழைய மாணவர்கள் சங்கம் தான் 'தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.இ)' இச் சங்கத்தை கெங்காவுடன் சேர்ந்து ஆரம்பித்த ஐவரில் யானும் ஒருவன் என்பதிலும், கடந்த 33 வருடங்களாக தொடர்ந்து யாம் இருவரும் சங்கத்தின் ஆட்சிக் குழுவில் இருந்து வருவதுடன் தற்பபோது சங்கத்தின் போஷகர்களாக இருக்கின்றோம்.

எல்லோருக்கும் நன்கு தெரிந்தவரும், எல்லோராலும் நன்கு அறியப்பட்டவரும், மதிக்கப்பட்டு வருபவரும், சிறந்த சமூக சேவையாளருமான கெங்கா அவர்களின் 70வது பிறந்த தின விழாவிற்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடையாதவர் எவரிருக்க முடியும்?

புலம்பெயர் தேசங்கள் மத்தியில் உலாவரும் ஒரு அன்பான, ஆற்றல் மிக்க, இனிய, ஈகைகுணமுடைய, உற்சாகமான, ஊக்கமான, எளிமையான, ஏற்றமிகு, ஐயமற்ற, ஒற்றுமையான, ஓய்வற்ற, ஔவை மொழியை நேசித்த நண்பன் காலத்தில் நானும் வாழ்ந்தேன் என்று என மார்பை நிமிர்த்தி தற்பெருமை கொள்வதில் தவறேதும் இல்லையென்றே நினைக்கின்றேன்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அயல் வீட்டார், கிணற்றுப் பங்காளர், கல்லூரியின் மண்வா சனையை சுவாசித்தவர், எமக்கெல்லாம் எந்த நேரத்திலும் கல்லூரியின் வரலாற்றை கூறவல்ல பெரும கனார் இவனை நமக்களித்த இவர் அப்பனுக்கும், அம்மைக்கும், ஆண்டவனுக்கும் நன்றிகள் கோடி!

அன்புடன் நண்பர்

**வ இ இராமநாதன் (இராம்)**

*11-12-2020*

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெங்கா ஒரு மறக்க முடியா நண்பன், தோழன், சகோதரன்

கெங்கா என அழைக்கப்படும் சிறீகெங்காதரன் என்னுடைய 43 வருட நண்பன் என்னும்போது அது இரத்தத்துடன் சேர்ந்த உறவு என்று கூட சொல்லலாம். எம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் ஒருமிக்க பயணித்தவர். எமது சொந்த விஷயமாய் இருந்தாலும், அரசியல் விஷயமாக இருந்தாலும் நாம் ஒருவருக்கொருவர் துணையாய் நின்ற காலத்தை மறக்க முடியாது. அப்படி விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருடன் மாத்திரமே பகிர்ந்து கொள்ளலாம்.

1977ஆம் ஆண்டு கலவரத்தின் போது லண்டன் காணாத பெரிய ஊர்வலம் ஒன்றை ஒன்றாய் நடத்தினோம். விடிய விடிய இருந்து banner, placards எழுதி காலையில் ஊர்வலத்துக்கு சென்றிருந்தோம். அதன்போது தோழர் ரட்ணா ஈரோஸ் இயக்க ஸ்தாபகர் அவர்களுடன் இணைந்து அந்த ஊர்வலத்தை முன்நின்று நடத்தினார்.

சில நாட்களின் பின்னர் தமிழர் மாணவர் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட பொழுது எங்களது முதல் கூட்டம் சவுத் பாங் பொலிடெக்னிக் மண்டபத்தில் அவருடைய கம்பீரமான பேச்சுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய விடுதலை அரசியல் பங்கினை முன்நின்று நடத்திய ஒரு முக்கிய செயற்பாட்டாளராக கெங்கா செயல்பட்டார். அவருக்கு நிகர் அவராகவே இருந்தார்.

நாட்டுப் பிரச்சினைகள் ஓய்ந்து இருந்த பொழுதும் கெங்கா அரசியல் பிரச்சினைகளில் இருந்து ஓய்ந்து இருந்ததில்லை. தொடர்ச்சியாக கருத்து ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் ஜே ஆர் ஜெயவர்த்தனே அரசுக்கு எதிராக திட்டங்களை தீட்டிய தோழர்களுடன் செயற்பட்டார். அவர் மூலமாக பல இடதுசாரி தொடர்புகளை அவர் ஏற்படுத்தினார். இவர் இயக்கத்துக்கு எடுத்த முக்கிய நேர்முக தேர்வுகளில் ஒன்று காலம்சென்ற திரு அன்டன் பாலசிங்கம் அவர்கள்.

அன்று 5-4-1981 தங்கத்துரை குட்டிமணி ஜெகன் போன்றவர்கள் கைது செய்யப்பட்ட பொழுது லண்டனில் அரசியல் கைதிகளுக்கு விடுதலைக்காக Campaign for the release of Eelam political prisoners என்ற அமைப்பை ஆரம்பித்து நடத்துவதில் ஒரு முக்கியமான செயற்பாட்டாளராக இருந்தார். இந்த அமைப்பு ஒன்றுதான் எல்லாசாராரும் ஒன்றாகச் செயற்பட்ட அமைப்பு.

1983 கலவரத்தின் பின்னர் அரசியல் கைதிகள் என்று ஒரு நிலை இல்லாத போது Eelam solidarity campaign என்று பெயர் மாற்றப்பட்ட கூட்டு பிரதிநிதிகளின் அமைப்பில் பொறுப்பாளராக இருந்தார். இவர் ஒற்றுமைக்காக எடுத்த முயற்சிகளை மறக்கமுடியாது. அதன் பின்னர் வந்த ENLF அமைப்பில் தொடர்ந்து பணியாற்றினார். அதன் பின்னர் நடந்த அவலங்கள் அவரை வேறுவழியில் கொண்டு சென்றது.

அவர் எந்தக் கட்டத்திலும் தன் குடும்பத்தை மறந்ததில்லை. அவருக்கிருந்த காதலுக்கு நான் தூது போன காலத்தை நினைத்துப் பார்க்கின்றேன். ஜெயாவின் வீட்டுக்குப்போய் கெங்கா கொடுத்த சேலை , பரிசுகளையும் கொடுத்துவிட்டு எல்லோரின் முகத்திலும் சந்தோஷம் பொங்க நான் விடை கொடுத்து திரும்பி வந்தேன்.

கெங்கா லண்டனில் இருக்கும் பொழுது அவர் வீட்டில் பெரிய சட்டிகளில் தான் சமையல் நடக்கும். யார் வருவார் போவார் என்று தெரியாமல் வீடு திறந்தே இருக்கும். மற்றவர்களும் சாப்பிட்டு திருப்தியாக போகும் வண்ணம் அந்த வீடும் விருந்தோம்பலுக்கு உகந்த இடமாக என்றும் இருந்தது.

கெங்கா மூலம் ஏற்பட்ட அந்த தொடர்பு அவர்களுடைய குடும்பத்துடன் பழகச் செய்தது. அவருடைய வீட்டில் நான் செலவழித்த காலங்கள் நாட்டின் அரசியலில் முக்கியமான காலங்களாக இருந்தன. எனது நண்பர் இன்பம், செல்வம் 1979 கடத்தி கொல்லப்பட்ட போது அவர்கள் வீட்டில்தான் எனக்கு இந்த செய்தி கிட்டியது. பயங்கரவாத தடைச்சட்டம் நிறைவேற்றிய போது அங்கு நடுங்கி போய் நின்ற ஞாபகம் வருகின்றது. அந்த நேரங்களில் அவர்கள் வீட்டில் அரவணைத்து ஒவ்வொருவரையும் கவனிப்பதை ஆச்சரியத்தோடு பார்ப்பேன்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துகள் கெங்கா.

அன்புடன்

**சாள்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Wishing my dear friend Genga a very happy 70th birthday.

I'm grateful for all the memories we have created together so far and pray that we continue to enjoy a strong friendship for many more years to come. From one old timer to another, I feel it is only right that I offer you the following advice as you join the 70s club:

'The secret of staying young now you're 70 is to live honestly, eat slowly and lie about your age!'

Having a shared passion for sports and in particular, sports organisation - it seems inevitable that we would go on to enjoy a friendship that now spans over thirty years. Your contribution as a founding member of TSSA, as a secretary and finally president of the organisation is a testament to your superb organisational skills and strength of character.

I know that I and many others have come to rely on your straight talking, no nonsense approach to any discussion and have been grateful to have you by my side through many challenging situations over the years. You have always been able to identify solutions to problems and I know that i can always count on you to speak your mind and deliver the very best in any situation.

This was never more evident than when we visited Sri Lanka in 2006 as part of the TSSA netball tour. It was your connections and knowledge of the areas in the North And East that allowed us to have such a successful and fulfilling trip.

The wide network of friends and colleagues you have acquired over the years is attributed to your reliability and hardworking nature and has allowed the organisations we have worked in together to access many different opportunities over the years. You are never afraid to get stuck in to field work such as hand delivering 100s of leaflets to advertise various events arranged by TSSA.

I hope that we continue to engage in hearty conversation and engaging debate and that you never grow tired (despite growing older!) of speaking the truth.

With very best wishes on your special birthday!

**S Mylvaganam (Myla)**

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவையாளர் கெங்கா அவர்களுக்கு இனிய 70ஆவது பிறந்த நாள் வாழ்த்துகள்

லண்டனிற்கு புலம் பெயர்ந்த பின்னர் ஐக்கிய ராச்சியத்தில் உள்ள பல தமிழ் அமைப்புகளுடன் எனக்கு தொடர்பு உள்ளது. 35ஆண்டுகளுக்கு மேலாக பல அமைப்புகளின் செயற்பாடுகளை அவதானித்து வருகிறேன். அலுக்காமல், சலிக்காமல், சளைக்காமல் தொடர்ந்து வருடக் கணக்காக சமூக சேவையில் ஈடுபடுகின்ற சிலரில் திரு நாகலிங்கம் சிறீகெங்காதரன் (கெங்கா) முக்கியமானவர்.

தாயகத்திலேயே இடதுசாரிக் கருத்துடன் வளர்ந்து, சமூக முன்னேற்றத்துக்கு செயலாற்றிய அனுபவம் உள்ளவர் இவர். புலம் பெயர்ந்த பின்னர் தாயக அக்கறையுடனும், புலம்பெயர் சமூக முன்னேற்றத்துக்கும் இவரது பணிகள் தொடருகின்றன.

அரசியல், விளையாட்டு, கலை இலக்கியம், நூல் வெளியீடுகள் சமூகநிகழ்வுகள் என்று கெங்கா செய லாற்றும் பரப்பு மிக விசாலமானது.

சமூக அக்கறையுடன் பல விதமான பொது அமைப்புகளில் கெங்கா தீவிரமாக செயலாற்றுவதை பார்த்தி ருக்கிறேன்.எங்கெல்லாம் கெங்கா செல்கிறாரோ அங்கெல்லாம் அவருடைய மனைவி ஜெயகௌரியை புன்னகையுடன் காணலாம். அவருடைய பணியும் முக்கியமானது.

குறிப்பாக தமிழ் பாடசாலைகள் விளையாட்டு சங்கம், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் போன்ற அமைப்புகளில் மிகுந்த அர்ப்பணிப்புடனும் கடும் உழைப்புடனும் இவர் அந்த சங்கங்களின் முன்னேற்றத்துக்கு நீண்ட காலமாக உழைத்து வருபவர்.

பொது வேலைகளில் ஈடுபடும் போது பொதுவாக பெரும்பான்மைக் கருத்துடன் ஒத்தோடுபவர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன். தனது சுயத்தை இழக்காமல் தனது கருத்துக்களை சமரசம் செய்யாமல் செயற்படுவது மிகக் கடினம். கெங்காவிடம் தனது கருத்தை தயக்கமில்லாமல் எந்த இடத்திலும் சொல்லும் துணிவு உள்ளது.

90 களில் தமிழ் பாடசாலைகள் விளையாட்டு சங்கம் நடத்தும் விளையாட்டு விழாவில் என்னை சிறுவர்களுக்கு நாடகப் பட்டறை நடத்த கெங்கா அழைத்திருந்தார். திறந்த வெளியில் நடந்த அந்த பட்டறை எனக்கு ஒரு நல்ல அனுபவமாக அமைந்தது.

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்க நிகழ்ச்சிகள் பலவற்றில் எமது நாடகங்களை நடத்தும் படி கெங்கா அழைத்திருக்கிறார். எனது பல நாடகங்கள் ,கானசாகரம் போன்ற ஈழத்து பாடல்கள் அடங்கிய இசை நிகழ்ச்சிகள் மகாஜனா சங்க நிகழ்வுகளில் இடம்பெற்றுள்ளன.

2013 இல் நாங்கள் இலங்கையில் எமது லண்டன் குழுவினருடன் சென்று நாடக விழாவை நடத்திய போது , மகாஜனக் கல்லூரி அதிபருடன் தொடர்புகளை ஏற்படுத்தி கல்லூரியில் எமது நாடக விழா நடைபெற கெங்கா வழிசமைத்து தந்தார்.

சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு எமது மூன்று நாடகங்களை நிகழ்த்தியமை மறக்க முடியாத அனுபவம்.

நல்ல நினைவாற்றலுடன் தனது வாழ்க்கை அரசியல் அனுபவங்களை முகநூலில் எழுதி வருகிறார். ஈழத் தமிழ் சமூகத்தின் ஒரு காலத்தை பதிவு செய்யும் இந்த கட்டுரைகள் விரைவில் நூலாக வெளிவர வேண்டும்.

அவருடனான எனது நீண்ட கால நட்பு காரணமாக ,எனது 60 ஆவதுபிறந்த நாள் விழாவில் அவரும் அவருடைய 60 ஆவது பிறந்த நாள் விழாவில் நானும் கலந்து கொண்டமை எனக்கு மிக்க மிகிழ்ச்சி.

கொரோனா காலத்தில் வரும் பிறந்த நாளில் அவரது நினைவுகளை அடக்கிய ஒரு ஆவணமாக தனது தந்தையாருக்கு ஒரு பதிவை செய்யும் மகன் ஜனகனுக்கு எனது நன்றி.

கெங்கா இன்னும் பல்லாண்டு வாழ்ந்து எங்கள் தமிழ் சமூகத்துக்கு பணியாற்ற எனது இதய பூர்வமான வாழ்த்துகள்.

**நாடகர் க. பாலேந்திரா**
**லண்டன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Wishes from Shooting Star

### We wish you a very Happy and joyful 70th Birthday Celebrations

Trust Janagan & Jaya would have organized many more surprises for the day.

Just worked out from your latest "WhattsApp" post regarding your father, he would have celebrated his 100th Birthday this year more appropriately 100 years of his birth. What a coincidence?!! As Ishwaran said, you have taken the full responsibility of your family on his demise and guided them properly and made them all what they are today.

Well our friendship started over 55 years ago, using the front room in your house as a Change Room for our cricket practice. Then the good old Shooting Star Sports Club days followed by the London days. I still remember the days Pappa and me will arrive in London and stay with you in your room during the Uni holidays to make some quick money for our survival in England. Thank you for all what you have done.

Though we went on our separate ways, we make it a point to see each other whenever I come to London. The last being the SSSC Reunion and your 40th Wedding anniversary celebrations a year ago in Sri lanka.

Wish you Many Many Happy Returns of the day. May your future years be happy and joyful as ever.

Just a little word of advice:
At 70, there are two rules for making your Birthday unforgettable:
Rule 1: Have the time of your life.
Rule 2: Don't forget rule 1
From **Ananthi & Ira and Childre**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Happy 70th Birthday Genga. Our friendship started 55 years ago and strengthened further, after we started Shooting Star Sports Club (SSSC) in 1967. Despite his political commitments, Genga was always there for us to help in all aspects of our life. Genga's house was our 'Club House' and the doors were opened at any time for us - his parents were incredibly supportive of us and always with a smiling face.

I like to add few comments about SSSC. We were fifteen/sixteen years old, when we formed SSSC. It was the first in our generation to form an individual club, while still at school. Genga had the energy to start this 'project' and coordinate to get all our support. The culture of the club was mainly driven by Genga and we celebrated various activities and achievements of the club. My connection with the club, opened a new world for me - I developed the courage to question everything and stood strong for what I felt right. I am always thankful to the club and my friends, specially to Genga for influencing me along this journey.

After I left school, I did not have close contact with Genga. However, I was following all his contribution to the community and to Mahajana College. After Genga went to London for his higher studies, I had no contact with him. Our SSSC reunion in Sri lanka during 2020 gave us the opportunity to meet all the active members. I spent lot of time with Genga during the planning of this reunion and a big thanks to Genga for arranging the meeting with the staff and the tour around Mahajana college.

"A friend in need is a friend indeed" - Genga is a living example of this saying. He was there for us during the good and the bad times. His vibe attracted all of us and he led us during our 'best times' of our school days. He never let us do naughty or silly things alone, he joined us!! He was there for all the happy and sad events relating to SSSC members and lately he came all the way to Sydney during 2018, for a wedding of one of SSSC member's daughter. In summary he is a unique person, and I am incredibly grateful to have Genga in my life.

**Wijayakhanthan (Wijay)**
Shooting Star Sports Club friend

"I have known Gengatharan since the mid 1960s and became friends after a serious contention we had with the school management. Our friendship flourished then on despite having lots of differences, many disputes and opposing views in the political spectrum etc. This still is the case but we could count on each another to show up in times of need. Gengatharan is a reliable and very sincere person and I am proud and blessed to have him as my close friend."

**R Manickaratnam**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dear Genga,

I wish you a very happy and healthy 70th Birthday on 21st December 2020.

I am very happy that we all, the remaining Ten founder members and spouses of some friends of Shooting Star Sports Club Tellippalai, were able to meet and spend happy and memorable nine days of fun and joy together during February this year in Sri Lanka and finish this memorable event with your glorious wedding anniversary dinner. This was a rare event of "friends are there forever" which many people could only dream of having. I am so grateful to have such wonderful lifetime true friends.

May God bless you with good health and happiness and help you to continue for many more years with your devotion to social work and ever willing attitude to help others. Your old time classmate and friend.

**Ishwaran**

New Zealand

Gengatharn was called in short as genga by all of us in class was so near and dear to us .He was so humble, well informed and took the leadership in all activities.He is a good friend and very helpfull person. It was such a pleasure in meeting him again after leaving school. I first saw him when I went to london. It was the same old ganga welcoming me again


It was a warm welcome and again I managed to see him

Last year when there was a reunion with the rest of our batch mates. We managed to visit many places in jaffna and also had the privilege in visiting our school mahajana college where he organised to meet the current children

And had a lunch which brought back our good old days again
Went to the beaches and had a lovely time again
This reunion made him to meet all the wives of his classmates too.
Friendship is a golden chain
That binds all friends together as the saying goes
Hope he has a wonderful birthday with all his dreams come true .Happy 70th Birthday ganga and may god bless you

Love

**Balendra and Amba**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை 70, தோழமை 50

தனது அகவை 70 இற்குள் நுழையும் எனது அன்பிற்கும், மதிப்பிற்கும், தோழமைக்குமுரிய 'கெங்கா' அவர்களின் உறவினை எனது பேனா முனைக்கு எடுத்துச் செல்வது என்பது மிகவும் நேசமிக்க இரை மீட்கும் பணியாகும். எனது கடந்தகால அரசியல் வாழ்வு குறித்து தனது நினைவுகளை முகநூலில் மிகவும் உற்சாகத்தோடும், பெருமிதத்தோடும் பகிர்ந்து கொள்ளும் வாசகங்கள் என்னை அவருக்கு மிக அருகில் எடுத்துச் சென்றுள்ளது. அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆரம்பித்த இந்த நெருக்கம் குடும்ப உறவாக பரிமாணம் பெற்று சந்ததி சந்தியாக வளரும் நம்பிக்கையை எமக்கு அளித்துள்ளது.

1970ம் ஆண்டு என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான அத்தியாயமாகும். ஒரு புறத்தில் தேசிய அளவில் பிரதான இடதுசாரிக் கட்சிகளான கம்யூ. கட்சி, சமசமாஜக் கட்சி என்பன சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைத்து பெரும்பான்மைப் பலத்துடன் அரசு அமைத்த வரலாறு ஆகும். அதே போலவே தமிழ் அரசியலில் குறிப்பாக தந்தை செல்வா அவர்களின் தலைமையில் இயங்கிய தமிழரசுக் கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக அவரது தொகுதியில் கம்யூ. கட்சியின் சார்பில் போட்டியிட்ட தோழர். வ. பொன்னம்பலம் அவர்களுக்கு ஆதரவாக நாம் ஆரம்பித்த அரசியலாகும். இன்று தனது 70 வது அகவையை எட்டியுள்ள தோழர் 'கெங்கா' வின் அன்றைய வயது 20 ஆகும். மிக இளமைக் காலத்திலேயே அதுவும் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் தேசியவாத உணர்வு என்பது மிகவும் பிரவாகித்துச் சென்ற காலமது. அவ்வாறான அரசியல் அலைக்கு எதிராகச் செல்வது என்பது சாதாரணமானது அல்ல. சிங்கள பௌத்த பேரினவாத அரசியலின் தீவிரம் தமிழ்த் தேசியவாத உணர்வுகளை உக்கிரமடையச் செய்திருந்த காலம். சாதாரண அரசியல் விவாதத்திற்கும், வன்முறைக்குமிடையே மிகச் சிறிய இடைவெளியெ காணப்பட்டது. அம்பனைச் சந்தி, தெல்லிப்பழைச் சந்தி, மல்லாகம் சந்தி என்பன அரசியல் விவாத இடங்களாக மாறியிருந்தது. பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர் மத்தியில் தமிழ்த் தேசயவாத உணர்வுகள் கொந்தளித்திருந்தன. இப் பின்புலத் தில்தான் நாம் கம்யூ. கட்சிக்காக தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கியிருந்தோம் . இதனால் நாமே தாக்குதலுக்கான இலக்காகவும் மாறியிருந்தோம். ஆனால் இவற்றிற்குப் பயந்து செயற்படும் நிலையில் 'கெங்கா' இருந்ததில்லை. ஒரு பலமான குடும்ப பின்னணி அவருக்கு இருந்தது. இதுவே பல விதத்திலும் என்னையும் காப்பாற்றியது. மிகவும் சிக்கலான, இக்கட்டான காலகட்டத்தில் ஒரே கோட்பாடுகளை நம்பிச் செயற்பட்ட நாமிருவரும் மிகவும் நெருங்கிய சகாக்களாக இன்று வரை தொடர்கிறோம். நட்பு என்பது ஏதோ காரணங்களுக்காக ஆரம்பித்து காலப் போக்கில் விடுபட் டுப் போகலாம். ஆனால் சாமான்ய சக மனிதனின் வாழ்வின் உயற்சிக்காக இணையும் போக்கு என்பது மிக உயர்ந்த மனிதப் பண்பின் இணைவு ஆகும். அதுவே இத் தோழமையை இன்று வரை பயணிக்க வைக்கிறது. ஒருவர் பயணத்தில் மற்றவரைக் காண வைக்கிறது. தாயகத்திலிருந்து வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு காரணங்களால் நாம் பிரித்தானியாவிற்கு வந்த போதிலும் குறிப்பாக நான் வந்தபோது எனக்கிருந்த பலமான உறவு 'கெங்கா' ஆகும். அந்த நன்றியும், விருந்தோம்பலும் எனது மனங்களில் மிகவும் ஆழமாகப் பதிந்துவிட்ட நினைவுகளாகும். இவற்றை நாமிருவரும் எமது அடுத்த சந்ததிகளிடம் ஒப்படைத்தே வருகிறோம்.

## தோழனே!

எமது தனிப்பட்ட வாழ்வுகள் பல்வேறு நெருக்கடிகளுக்குள் சென்று மீண்டு வந்திருக்கிறது. நாம் நம்பிய அரசியல் கோட்பாடுகளும் அதே சிக்கலுக்குள் சென்றுள்ளது. இருப்பினும் அடிப்படை மனித உரிமைக்காக நாம் இணைந்த பயணம் மேலும் தொடர வேண்டிய காரணிகள் இன்னமும் அதிகரித்தே செல்கின்றன. சாமான்ய மனித வாழ்வின் பிற்பகுதிக்குள் தள்ளப்பட்டுள்ள நாம் தற்போது ஓரளவு சுதந்திர மனிதர்களாக, கடந்த காலத்தை ஆழமாக மீட்டுப் பார்க்கும் ஓர் பக்குவ நிலையை நோக்கி புதிய பாதையை அமைத்து வருகிறோம். எழுதுவதற்கு ஓராயிரம் இருக்கிறது. சிறு செய்தி நூலாக மாறிவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்கு எண்ணம் செல்கிறது. எழுத்து அல்ல எமது பயணம் பதிலாக அமையட்டும். அந்த வகையில் உங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து செல்வது என்பது ஒரு வகையில் பின்னோக்கிப் பார்வையைச் செலுத்துவது போன்றது. இவ்வாறான இரை மீட்டல் என்பது எம் மை மேலும் புனிதர்களாக புடம்போடும் செயற்பாடே. இவை யாவும் எம்மை அறியாமலேயே நாம் ஆரம்பிக்கும் புதிய பயணத்திற்கான ஆரம்ப அடையாளங்களே. உங்கள் அனுபவம் என்பது பல பரிமாணங்களை உடையது. அது தாயகத்திலிருந்து இன்று புகலிடம் வரை இடையறாது தொடர்கிறது. அவற்றின் அனுபவங்கள் என்பது எல்லோராலும் பகிர்ந்து கொள்ள முடிவதில்லை. ஏனெனில் இலட்சிய மனிதர்களே அதன் தாற்பரியத்தை, தமது வாழ்க்கைப் பயணத்தை மீள் நோக்கிப் பாரக்கும் ஆற்றல் உடையவர்கள். உங்களுடனான எனது உறவும், பயணமும் என்றும் தொடரும் என்ற இனிய சிந்தனையோடு ஆரோக்கியமான உடல் நலத்துடன் வாழ உங்களையும். குடும்பத்தினரையும் வாழ்த்துகிறேன்.

**தோழமையுள்ள**

**வி.சிவலிங்கம்.**

*07-11-2020.*

•••

## தோழர் கெங்காதரனின் அகவை எழுபது என் வாழ்த்துகள்

தோழர் கெங்காவின் தோழமைத் தொடர்பு வாலிப அமைப்புடன் தொடங்கியது ,1970 இல் தொடங்கிய தோழமை இன்றும் 50 ஆண்டுகள் நிலைத்து தொடர்ந்தும் ஒரே நேர்கோட்டில் அதே சிந்தனையில் பரிணமிக்கின்றது பார்வையில் 50 ஆண்டுகள் வரலாற்றில் இது அரை நூற்றாண்டு.பாலிய வயதிலேயே ஒரு சமூக விஞ்ஞான பொதுவுடைமை சித்தாந்தத்தைப் புரிந்து கொண்டு இன்றும் எந்தப் பிறழ்வும் தளர்வும் இல்லாமல் தொடர்ந்து கொண்டு இருப்பது என்பது, கொள்கைப் பிடிப்பின் உண்மைத் தன்மையையும், யதார்த்தத்தையும் வெளிப்படுத்துகிறது. ஒரு முக்கிய அம்சத்தை சொல்லியாக வேண்டும் நானும், கெங்காவும் சிவலிங்கமும் வட பிரதேச கொம்யூனிஸ்ட் வாலிப அமைப்பின் செயலாளர், அமைப்பாளர் பொருளாளர், என இயங்கி வந்தோம். இன்றும் மூவரும் அதே சிந்தாந்தத்தில் அதே கொள்கையிலும், தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருப்பது இன்னும் பெருமை சேர்க்கின்றது. அரை நூற்றாண்டு வரலாறு புலம் பெயர்ந்து கெங்கா பொது நலனிலே தன்னை அர்பணித்தார்.அவரின் ஆளுமைகள் பல அமைப்புக்களை உருவாக்கிறது அவை இன்றும் செயற்படுகின்றன. இவை அவருக்கு கிடைத்த வெற்றி.

தோழமையுடன்

**நல்லதம்பி ஜெயபாலன்**

•••

## தோழர் கெங்காதரனுக்கு என் தோழமை வாழ்த்துகள்!

*தோழமையால் இணைப்புக் கொண்டு, உத்தியோகத்தால் ஒன்று சேர்ந்து, ஒரேவீட்டில் ஒன்றாக வாழ்ந்து ,ஒன்றாக சமையல் செய்து, உண்டு மகிழ்ந்து,எங்கள் வாழ்வை ஓட்டியதில் கண்ட சந்தோஷம் மீண்டும் வராதா கெங்கா?*

*கீரிமலைக் குளிப்பும் , அம்மாவின் விருந்தோம்பலும் இரட்டிப்பு சந்தோஷங்கள் ,நட்பின் தோழமையின் வெளிப்பாடாக தங்களின் திருமணபந்தத்தில் நானும் ஒரு சாட்சியாக நின்றது இன்றும் மகிழ்ச்சி.*

என்று நாடு வந்தாலும் நடாவை நாடாத நாளில்லை. என்றும் எங்கள் தோழமை தொடர, தங்களின் பிறந்த தினத்தில் வாழ்த்துவதில் பெருமை கொள்கிறேன். என்றும் நீண்ட நலத்திற்கும், வாழ்விற்கும் என் வாழ்த்துகள் கெங்கா.

தோழமையுடன்

**கந்தையா நடராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிலைத்து நீடிக்கும் நட்பு!

ஈ.கே.ராஜகோபால்

'அது செய்வேன்.இது செய்வேன்.வெட்டிப் பிடுங்குவேன்' என்று தம்பட்டம் அடிக்க மாட்டார்.

தனக்கு எது சரியென்று படுகிறதோ அதைச் செய்வார்!

'உடுக்கை இழந்தவன் கை போல..' அந்த இடத்தில் நிற்பார். நட்பு என்பதற்கு வள்ளுவன் சொன்ன இலக்கணத்தை அவரிடம் பல தடவை கண்டிருக்கின்றேன்.

போலித்தனம் இல்லாத மனிதர். எதிர்பார்த்து எதையும் செய்யார். பவிசு காட்டாதவர்!

எனக்கும் கெங்காவிற்கும் கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டு காலத் தொடர்பு.

லண்டனில் முப்பது ஆண்டுகளுக்கு மேலான நெருக்கம்.

இடதுசாரி சிந்தனைகளோடும் முற்போக்கு எண்ணங்களோடும் வளர்ந்தவர் அவர். ஊறித் திளைத்தவர்.

நானும் அவ்விதமான போக்கும் உறவும் கொண்டவனாக சமத்துவமான ஒரு புதிய சமுதாயம் அமையவேண்டும் என்ற கனவோடு வளர்ந்தேன்!

போற்றியவர்களைத் தூற்றியோ தூற்றியவர்களைப் போற்றியோ அவர் பேசியதை அவருடன் பழகிய இத்தனை ஆண்டு காலங்களில் ஒரு தடவையாவது நான் பார்த்துக் கேட்டதில்லை.

நிலையான புத்தியும் நிரந்தரமான நியாயமும் கொண்டவர் கெங்கா!

1960 களின் இறுதிப் பகுதி என்று நினைக்கிறேன். 'ஈழநாடு' வில் பணியாற்றிய காலம்.பொதுவுடமைச் சித்தாந்தங்களுக்கு ஆதரவானவர்களை மிகவும் நேசித்தேன். அவர்கள் தொடர்பான கருத்துக்கள் செய்திகள் தவறாது இடம் பெறச் செய்வேன்.

அந்தச் சமயத்திற்தான் கெங்கா என்னைச் சந்தித்தார்.

அவ்வப்போது சந்தித்துப் பேசுவார். பத்திரிகையில் அவர் தந்த செய்திகள் ஆக்கங்கள் வெளியிடுவதோடு அவரது தொடர்பு முடிந்து விடவில்லை.

அப்போதே என் நெஞ்சில் நிலையான ஓர் இடத்தை அவர் பிடித்துக் கொண்டார் என்பதை இப்போது உணர்கின்றேன்.

இத்தனை ஆண்டுகள் நீடிக்கின்ற நெருக்கமான நட்பு.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் படித்தேன். அங்கு ஆசிரியராகக் கடமையாற்றிய தோழர் வி.பொன்னம்பலம் எனக்கு கம்யூனிஸ சித்தனைகள் மீது பிடிப்பை ஏற்படுத்தினார். கெங்காவும் அவருடைய கொள்கைப் பிடிப்பினால் ஈர்க்கப்பட்டார். தேர்தலில் கம்யூனிஸ்ட்டாகப் போட்டியிட்ட வி.பிக்காக உழைத்தார். சோசலிஸ சமூகத்தை உருவாக்குவதில் முழு மூச்சாகப் பங்கு கொண்டார்.

1970 இல் சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைத்தது. விவசாயிகள் தொழிலாளர்கள் போன்றோர் மத்தியில் புதியதோர் எழுச்சி உதயமானது என்பதை இலகுவாக மறந்துவிட முடியாது.அந்த நேரத்தில் பிரதமரான ஸ்ரீமாவோவின் வெற்றி வியக்க வைத்தது.இடதுசாரி சிந்தனை நோக்குடைய கெங்கா போன்றவர்கள் இந்த மாற்றத்தின் விளைவைப் பெருமை கொண்டதில் நியாயம் இல்லாமல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலத்தான் 'ஈழநாடு' வில் தொடராக எழுதிய 'மக்கள் பிரதமர் ஸ்ரீமாவோ' நூலாக வெளிவந்தது.

வடக்கு இளைஞர்களின் உழைப்பினால் விசுவமடு பொன்கொழிக்கும் பூமியாகி மண் குடிசைகள் எல்லாம் மாடி மனைகளாக மாறிய காலம் பற்றியெல்லாம் எப்படி மறக்கலாம்? அப்போது கெங்காவின் மகிழ்ச்சியை நேரில் பார்த்து மகிழ்ந்தவர்களில் நானும் ஒருவன்.

'ஈழநாடு' இதழில் 'வி.பி யின் சோவியத் பயணக் கதை' யை தொடராக எழுதினேன்.

வி.பொன்னம்பலம் அந்நாட்டுக்குச் சென்று திரும்பிய பின்னர் அவரது அனுபவங்களைக் கேட்டு பல அத்தியாயங்களாக எழுதிய போது பல சமயங்களில் அவரை சந்தித்து எழுதுவதற்கு கெங்கா எனக்கு உதவியிருக்கின்றார். உற்சாகப்படுத்தியிருக்கின்றார்.

பின்னர் 'ஈழநாடு' அச்சகத்தில் அச்சிட்டு அது நூலாக வெளிவந்து மாதகல் கந்தசாமியின் தலைமையில் வெளியீட்டு விழா நடந்தது.

படித்த பாடசாலையோடு இன்று வரை இரண்டறக் கலந்து வாழ்கின்ற இவரைப் போன்ற இன்னொருவரை நான் கண்டதில்லை. லண்டனில் மகாஜனக் கல்லூரியின் பெருமைக்கு சிறப்புச் சேர்க்கின்ற தொண் டன். தாயகத்தில் அப் பாடசாலையின் வளர்ச்சிக்காக இங்கு உழைக்கின்ற செயல் வீரன். செயற்கரிய செய்யும் உண்மையான மகாஜனன் இவரே!

கெங்காவிற்கு மிக நெருங்கிய குடும்பத்தினரான 'தமிழ் ரைம்ஸ்' ராஜநாயகத்தின் இளைய சகோதரர் பெரி. சண்முகநாதன் ஸ்கந்தாவில் ஒரே வகுப்பில் படிக்கிற காலத்திலிருந்து தொடர்ந்து கொழும்பு ரஷ்யத் தூதரகத்தில் வேலை செய்கிற காலம் வரை அவனுடன் வாழ்ந்தவன். அவன் என் அரசியல் குருவாகக் கூட இருந்தான். சுன்னாகத்தில் 'மங்களபதி' எனது ஒரு காலத்து மந்திரம்.

லண்டனுக்கு வந்து பத்திரிகையே என் வாழ்க்கையாகி விட்டாலும் கெங்காவை நான் மறக்கவேயில்லை. பொதுவுடமை கருத்துகளில் இருந்து விலகிச் சென்றதுமில்லை.

'தமிழ்த் தேசியம்' என்ற ஈழத் தமிழர் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகின்றேன்.

கெங்காவின் பாதையில் நான் குறுக்கிட்டதுமில்லை. எங்கள் நட்பில் குறுக்கீடு வந்ததுமில்லை.

அவரது ஆக்கங்கள் முயற்சிகளுக்கு கடந்த இருபத்தைந்து வருடங்களாக 'புதினம்' இதழில் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றேன். இதனால் சில 'குட்டிச் சாத்தான்' களின் ஏச்சுப் பேச்சுகளுக்கும் உள்ளாகியிருக்கிறேன்.

என்னைப் போன்றே குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்து பொறுப்புகளைப் பொறுப்போடு செய்பவர். சமீபத்தில் அவரது சகோதரி 'பாப்பா' வின் கடும் சுகயீனம் மரணம் போன்ற நிகழ்வுகளை நேரில் கண்டு நெகிழ்ந்திருக்கின்றேன்.

குடும்பத்தின் கடைக்குட்டியான நாடறிந்த எழுத்தாளர் சபேசன் உட்பட அவரது குடும்பத்தினர் அனைவரும் எமது அன்புக்குரியவர்கள். அவர்களும் எங்களை நேசிப்பவர்கள்.

அவரது ஒரே அருமை மகன் எல்லாவற்றுக்குமே அவருடன் ஒத்துழைக்கின்ற அவரது இல்லாளுடன் கெங்கா நன்றே நலத்துடன் நீடுழி வாழ்க என என் மனைவியோடு சேர்ந்து வாழ்த்துகின்றேன்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெங்கா: அம்பனையின் வயற்காற்று

- மு.நித்தியானந்தன்

கெங்கா லண்டனில் 40 ஆண்டுகாலமாக வாழ்ந்து வருகின்றார் என்றாலும், 'அம்பனைக்கு முன்னால் அடிக்கும் வயற்காற்றை' இன்றும் சுகித்து, சுவாசித்து வரும் மனிதர் அவர். அந்த மண்ணின் வாழ்வும் வளமுமே கங்காவின் ரத்தநாளங்களில் செறிந்திருக்கிறது. 'கொம்புலுப்பிப் பூக்களினைக் கொட்டுகின்ற குடைவாகை' நீழலில் 'கனவு உலகு' கண்ட இளைஞன் கெங்கா, நாளெல்லாம் தான் பிறந்த அம்பனைத்தாயின் மேனியில் வகைவகையாய் பொன்னாய், மணியாய், வைரமாய் ஆபரணங்கள் அணிவித்து அழகு பார்த்து மகிழ்பவன். அந்த அழகுப் பொசிப்பின் அரிய அறுவடையாய் சிறந்திருப்பது கெங்காவின் 'வயற்காற்று' என்ற நூல். கூகுளில் தேடி இம்மாதிரி நூல்களை ஆக்கமுடியாது. அம்பனையின் கதை சொல்லவல்ல ஆலமரம் இவன். யாழ்ப்பாண இலக்கிய வளத்தின் களத்துமேடாகத்திகழ்ந்த தெல்லிப்பழையின் நீரூற்று கெங்காவிடம் 'வயற்காற்று' ஆக பொங்கியதில் வியப்பில்லை.

தெல்லிப்பழை சூழ்ந்த கிராமங்களில் இந்த மனிதரின் காலடிச்சுவடுகள் பதியாத இடமே இல்லை. அந்த ஊரின் வயல் வெளியின் பசுமையில், அருள் சுரக்கும் ஆலயங்களின் ஆராதனையில், கல்விச் சுடர் கொளுத்தும் மகாஜனாவின் மாண்பில், யூனியன் கல்லூரியின் நீண்ட பாரம்பரியத்தின் பெருமிதத்தில், அந்த மண்ணில் வாழ்ந்த சான்றோரின் இலட்சிய வாழ்வினைப் பொன்னே போல் போற்றி, இலக்கியப் பெருமக்களின் சிருஷ்டிகளில் திளைத்து மகிழும் சொப்பன உலகு கெங்காவினுடையது.

அம்பனைக்கலைபெருமன்றத்தின் தூணாகவிருந்தவர் கெங்கா என்று நினைவு மீட்கிறார் ஆ. சிவநேசச் செல்வன்.அம்பனையில் உழவர் விழாக்களை விமர்சையாக நடத்தி. அந்த விழாக்களில் இலக்கியப்பெருமக்களை வாழ்த்தி, செழுமையான நூல்களை வெளியிட்டு, இயற்கையை வணங்கி, இலக்கிய வாணர்களைத் துதிக்கும் கடந்துபோன ஒருதலைமுறையின் சாட்சியமாகத் திகழ்பவர் கெங்கா. அம்பனை என்ற அந்தச் சிறு கிராமத்தின் மான்மியத்தை வாழ்நாளெல்லாம் பாடித்திரியும் பண்பு போற்றத் தக்கது. இம்மாதிரி மனிதர்கள்தான் தாங்கள் வாழ்ந்த மண்ணிற்கு பெருமை சேர்க்கிறார்கள்.

கெங்காவிற்கு நாளொன்றில் எத்தனை மணி உள்ளது என்றால் தெரியாது. அப்படிப்பட்ட உழைப்பாளி. எங்கெங்கு நல்லன நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் இருப்பார். இருக்கிறார் என்பதிலும் உழைப்பார் என்பதே பொருத்தம்' என்று அமரர் பொ .கனகசபாபதி என்ற வசிஷ்டரால் வாழ்த்துப் பெற்ற புண்ணியன் இவர். கங்காவின் இந்த சமூக, அரசியல் பேருழைப்பிற்கு சாட்சியம் தருபவர் அரசியல் செயற்பாட்டாளர் வி. சிவலிங்கம் அவர்கள்.

குடும்பம், தொழில் மேன்மை என்று தம்மைச் சுற்றியே கோடுபோட்டு வாழும் சாமானியர்களின் மத்தியில் சமூகம் குறித்து சிந்தித்து செயற்படும் சமூகமனிதன் இவர். எந்த சமூகத்திலும் இம்மாதிரி மனிதர்கள் அபூர்வமாகவே வந்து சேர்கிறார்கள். லண்டனிலும் இந்த சமூகப்பணியில் சிற்றெறும்பாய் உழைக்கும் பாங்கினை அறிந்தோர் அறிவர். துர்க்கை அம்மன் ஆலயத்திலும் கொல்லங்கலட்டியிலும் மண் சுமந்த மேனியன் இவன்.

வடபுலத்தில் அறுபதுகளிலும் எழுபதுகளிலும் நிகழ்ந்த அரசியல் செயற்பாடுகளின் உந்துவிசையாக கெங்கா செயற்பட்டிருக்கிறார். 1975 இல் காங்கேசன்துறையில் நடைபெற்ற இடைத்தேர்தல் இலங்கையில் எங்கோ ஒரு மூலையில் உள்ள தொகுதித் தேர்தல் அல்ல. முழு இலங்கையும் மூச்சடக்கிப் பார்த்துக் கொண்டிருந்த தேர்தல்.

சிறிமாவோவின் ஆட்சிக்கு தமிழ் மக்களின் ஆணை கேட்டு யாசித்த தேர்தலாக அது நோக்கப்பட்டது. இந்தத்தேர்தலில் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் வெற்றி என்பது ஏற்கனவே ஊர்ஜிதமாகிய ஒன்றுதான். ஆனால், இந்த மையநீரோட்ட அரசியலுக்கு எதிரான பாதையில், வெற்றி தோல்விகள் குறித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தியாமல், தான் வரித்த கொள்கைக்காக முழு உழைப்பையும் சிந்தியவர் அவர். எதற்கும் மசிந்து போகாத வைரம்பாய்ந்த அரசியல் போராளி கெங்கா. அரசியலில் எந்த சமரசத்திற்கும் விலைபோகாத போர்வாள் அவர். எந்தப்பக்கம் காற்று வீசுகிறது என்று பார்த்து நிற்கும் மதில்மேற்பூனைகளின் மத்தியில் கெங்கா அடலேறு. இலங்கையிலும்சரி, லண்டனிலும் சரி, தான் கொண்ட கொள்கையின் மத்தியில் கெங்கா உறுதியாகவே நின்றிருக்கிறார். இடதுசாரிச் சிந்தனைகளால் தன் உலகநோக்கினை செதுக்கிக்கொண்டவர் கெங்கா. வி.பொன்னம்பலத்தின் அரசியல் போதத்தில் உருவான முற்போக்கான யாழ்ப்பாண இளைஞர் அணியின் தளமாக கங்கா செயற்பட்டிருக்கிறார். அக்காலத்தின் தென்னிலங்கை இடதுசாரிகள் என்று பேர் சொல்லப்பட்ட அனைவரின் பேச்சுக்களையும் முன்வரிசையில் இருந்து கேட்டிருக்கிறார்.சென்றொழிந்துபோன காலத்தின் சிறப்பு அது.

ஆலயப்பணியா, பாதையை ஒழுங்கு செய்வதா, கல்லூரி விழாக்களை நடத்துவதா, விளையாட்டுக்கழகங்களை நிறுவுவதா, அரசியல் பிரசாரமா, கூட்டங்களை ஏற்பாடு செய்து ஒழுங்கு படுத்துவதா எதுவென்றாலும் சளைக்காமல் பணிபுரியவல்ல வல்லாளன். அதில் சந்தேகமில்லை.

அவர் செயற்பட்ட காலங்கள் வரலாற்றில் கனதிக்குரியவை.

மகாஜனவின் மாணவர்களுக்கு கெங்காவின் இல்லத்து கிணற்று நீர் தாகசாந்தி செய்தது என்பது மட்டுமல்ல, தாகம் கொண்டிருந்தோருக்கெல்லாம் அவரின் செயற்கரங்கள் நீண்டுகொண்டே இருந்திருக்கின்றன.

அவரை சுற்றி நல்ல மனம் கொண்ட மனிதர்களே என்றும் சூழ்ந்திருந்தனர். அது அவரின் பாக்கியம்.

உயர்ந்த சமூக விழுமியங்கள் கொண்ட ஒரு குடும்பத்தின் சாரம் அவரைப் போஷித்திருக்கிறது. அயராத உழைப்பாளியான அவரின் தந்தை, ஊர் போற்றும் பெருமனதுக்காரியான அவரின் அன்னை, காரியம் யாவிலும் கைகொடுத்து வாழும் அவரின் துணைவி ஜெயகௌரி, இளவலாய் - தமையனின் செயலுக்கெல்லாம் தளராது தோள் கொடுக்கும் தம்பி சபேசன் என்று ஓர் இனிய குடும்பம் வாய்த்தது கங்காவின் நற்பேறு. இவருக்கு எல்லா ஓடைகளிலும் நீர் சுரந்திருக்கிறது.

கெங்கா பயணித்த வாழ்வு பெறுமதி மிக்கது. அந்த வாழ்வு மேலும் இனிய கனிகளைத்தர வேண்டும் என்று பெருமகன் கெங்காவின் இந்த 70ஆம் ஆண்டு பிறந்த நன்னாளில் என் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

●●●

I wish a glorious 70th birthday to Genga, my dearest long-time friend, comrade and my junior at Mahajana.

It is my wish that you should use the remaining years of your life to accurately compile and publish the history of the golden era of the Communist movement in Jaffna in which we were both actively involved in order to inspire future generations.

The revival of the socialist movement is the only way to stop the world moving towards barbarism.

I wish you many more years of good health and happiness.

**Sooriasegaram**

●●●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















ஈழ தேசிய விடுதலை முன்னணி அங்குரார்ப்பண கூட்டம் - 1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GENGA 70
## Happy Birthday Patron



Gengatharan, Secretary of TSSA, was the 1st time I have heard the name back in 2001; to seek help to organise a local football tournament. After a few years I was in the process of establishing 11Stars Sports Club and it was during this time that Janagan Sri Gengatharan came to take part in football at Forster Memorial Park, Catford and the 2nd time I heard the name Gengatharan. It was Janagan that introduced me to his father Genga uncle. The picture of Sri Gengatharan I had in my mind was totally different to reality; he is an ordinary man with an extraordinary heart.

It was Genga uncle that put 11Stars Sports Club and Natchatram on the map of South East London, through our annual magazine, 'The Voice of Tamil Youth'. Within few minutes of conversation, it was very clear he is knowledgeable and had many experiences to back up his ideas; my age is half his experience. Over the past 10+ years, he has gone beyond expectations to become our backbone.

Furthermore, he has also helped me to grow personally, and the knowledge that I have learnt from Genga uncle to administer 11Stars and Natchatram; I am applying that today to solve much bigger problems.

Having got to know Genga uncle, I always made sure I met him for a coffee either at the beginning or towards the end of the day to listen to few of his stories. Uncle Genga, many more happy returns of the day and I look forward to another catch up with a birthday cake, coffee and of course a story!

Nilos Nirmalan,
Co-Founder, 11Stars Sports Club & Natchatram




Natchatram 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கருமமே கண்ணாயினார்'

**'கெங்கா!'** எனப் பலராலும் அன்புடன் குறிப்பிடப்படும் திரு சிறீகெங்காதரன் எனக்கு மிகவும் தெரிந்தவர். பல வருடங்களாகப் பரிச்சயமானவர். அவருடைய பெற்றோரும் என்னுடைய பெற்றோருக்கு மிகவும் பழக்கமானவர்கள். கெங்கா இப்போது எழுபதாவது வயதை நிறைவுசெய்கிறார் என்பது அவரின் வாழ்க்கையில் ஒரு முக்கிய மைல் கல்லாக அமைகிறது.

நாம் இருவரும் ஒரே கல்லூரியின் பழைய மாணவர்கள். ஆனால் நம்மிடையே உள்ள வயது வித்தியாசத்தால் வெவ்வேறு வகுப்புகளிலே படித்தோம். கெங்கா என்னைவிட வயதில் சிறியவர். அவர் சாரண இயக்கம், விளையாட்டு என்று சில துறைகளிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். நானோ படிப்புடன் பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி என்பவற்றுடன் மட்டுமே நேரத்தைச் செலவிட்டேன். அதனால் கல்லூரி நாள்களில் எம்மிருவருக்கும் எவ்வித நெருக்கமும் இருந்ததில்லை, வாய்ப்பும் வந்ததில்லை.

இலண்டனுக்கு நான் வந்தபின், கெங்காவும் இங்கே வந்தார். அப்போதும் காணும் இடங்களில், தெரிந்தவர் என்பதால், கண்டு பேசுவது தவிர வேறு தொடர்பு எதுவும் நம்மிடை ஏற்படவில்லை. அவர் அரசியலில் மிகுந்த ஈடுபாடு உடையவர். நானோ அரசியலை அண்மிக்காதவன். நான் திருமுறைகள், கோயில் என்று பொழுதைக் கழிப்பவன். அவரோ கோயிலுக்கு வந்தாலும் தன்னுடைய ,டைவெளியைப் பேணுபவர். இப்படி இருக்கும் நாளில், மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் இலண்டனில் உருவாக்கப்பட்டது. அதன் முதலாவது ஒன்றுகூடலை ஏற்பாடு செய்தோரில் கெங்காவும் ஒருவர். மகாஜனக் கல்லூரி பழையமாணவர் சங்கம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர் என்பதால் அவர் அங்கு இருந்தமை அதிசயமன்று. நானும் அந்த நிகழ்வுக்குப் போயிருந்தேன். அதிலிருந்து கல்லூரி சம்பந்தமான விழாக்கள், நிதி சேகரிக்கும் நிகழ்வுகள் என்று இருவரும் அடிக்கடி சந்திக்கச் சந்தர்ப்பங்கள் உருவாயின. பின்னர், செயற்குழுவிலும் இருவரும் சேர்ந்து செயற்பட்டோம். அதனால் அவரைப்பற்றி அறிய, நெருங்கிப்பழக எனக்கு அதிக வாய்ப்புக்கள் கிடைத்தன.

விழாக்கள், கொண்டாட்டங்கள் என்று எதுவாக இருந்தாலும் கெங்காவும் அவர் குடும்பத்தினரும் உணவு சகிதம் வந்து, விழாவுக்கு வந்தோரை உபசரித்துச் செல்வது வழக்கம். எப்படி இவ்வளவு அக்கறையோடு செயலாற்ற இவர்களுக்கு இயலுகிறது என்று நான் பலமுறை வியந்ததுண்டு. திருமணமோ, திருவிழாவோ, மரணச்சடங்கோ - எதுவுமே நண்பர், உறவினர் வட்டத்துக்குள் இவர்களின் உதவியின்றி நிகழ்ந்ததை நான் பார்த்ததில்லை. ஆர்வத்தோடும் மிகுந்த அர்ப்பணிப்போடும் அவர் குடும்பத்துடன் வந்து செயலாற்றுவார்.

மகாஜனக் கல்லூரிமீது கெங்காவுக்கு அளவுகடந்த அன்பு, பற்று, பக்தி என்று சொன்னால் அது மிகையாகாது. வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த பள்ளிக்கூடம் என்ற காரணமாக இருக்கலாம். அல்லது மகாஜனா வளர்ந்தபோது அதனோடு கெங்காவும் வளர்ந்தார் என்பதும் காரணமாகலாம். பழையமாணவர் சங்கத்தில் அவரின் பங்களிப்பு இதற்குச் சான்று பகரும். சங்கத்தின் செயற்குழுவில் வெயில், மழை, பனி, புயல், சூறாவளி என்று மாற்றங்கள் பல ஏற்பட்டபோதும் அவர் ஒரேமாதிரி இருந்து செயற்பட்டார். கல்லூரிக்கு உதவேண்டும் என்ற ஒரே எண்ணமே அவரின் உந்துசக்தியாக இருந்தது. ஊருக்குப் போகும்போதும் அவர் கல்லூரிக்குப் போய் அங்கு நடப்பவற்றைக் கண்காணித்து வரத் தவறுவதில்லை.

விளையாட்டுத் துறையிலும் கெங்கா தனது தடத்தைப் பதிக்கத் தவறவில்லை. இலங்கைப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகள், மகாஜனாவின் விளையாட்டுத் தினம் எனப் பல நிகழ்வுகள். பல அமைப்புக்களில் தலைவர், செயலாளர் பதவிகளை வகிக்கவும் அவர் தவறவில்லை. தவறாது அந்தந்த அமைப்புக்களின் வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டார். மேலும் எழுத எனக்கு விவரம் போதாது. விளையாட்டு எனது பொழுதுபோக்கன்று என்று முன்னரே சொல்விட்டேனே!

கெங்காவைத் தவறாது பார்க்கக்கூடிய இன்னொரு இடம் புத்தகவெளியீட்டு விழா. பல நூல் வெளியீட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்களில் கெங்காவின் பங்களிப்பு முக்கியமாக இருந்துள்ளது. இதற்குச் சாட்சி கூறுவதுபோல ஒரு புத்தகவெளியீட்டைச் சொல்லலாம். அது, என் தமையனார் திரு உமாமகேசுவரம்பிள்ளை இலண்டனில் ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று எட்டில் இருந்தபோது நடந்தது. தனது கட்டுரைத் தொகுப்பு ஒன்றை 'அதிதீரன்' என்ற பெயரில் அவர் வெளியிடுவதற்கு, 'அம்பனை கலைப் பெருமன்றம்' மூலம் ஏற்பாடு செய்தவர் கெங்காதான். முன்னின்று அதை நடத்தி விழா சிறப்பாக நடைபெற உதவியவர். அந்த நன்றியை அண்ணாவும் நானும் இன்றும் நினைவிற் கொண்டுள்ளோம்.

அரசியலில் கெங்கா இடதுசாரிக் கொள்கை உடையவர் என்பதைக் கெங்காவை அறிந்த யாவரும் அறிவர். எந்த மேடையிலும் அதை அவர் சொல்லத் தயங்குவதோ, பயப்படுவதோ இல்லை. ஆனால் அதேவேளை மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கவும் அவர் தயங்குவதில்லை. நான் அரசியலில் ஈடுபாடு அற்றவன் என்றாலும் நடப்பவற்றை அறிவதில் ஆர்வம் உள்ளவன். அந்த வகையில் பல சந்தர்ப்பங்களில், பல இடங்களில் கெங்காவுடன் அரசியலை அலசியிருக்கிறேன். அது ஒரு சுவை யான அநுபவமாகவே எப்போதும் இருந்துள்ளது. அரசியல் பேசினால் அது விபரீதமான விளைவைத் தரும், பகையை உருவாக்கும் என்று பயந்து பலரும் அரசியல் பேசத் தயங்குவர். ஆனால் கெங்காவுக்கும் எனக்குமிடையில் அந்த உரையாடல் சுமுகமாகவே எப்பொழுதும் இருக்கும்.

பொதுவாக இருவரிடையே கருத்துவேறுபாடு காரணமாக மனக்கசப்பு ஏற்பட்டுவிட்டால் அவர்கள் பலகாலம் பேசாமல் இருப்பார்கள். அல்லது நிரந்தரமாகவே பிரிந்துவிடுவார்கள். ஆனால், நான் பார்த்த அளவில் கெங்கா யாருடனும் எவ்வளவு வாக்குவாதப் பட்டாலும் பேசாமல் இருந்ததை நான் பார்த் ததில்லை. பல இடங்களில் அவர், விவாதம் முடிந்து, போகும்போது, நிறைவில் ஒரு சிறு புன்னகையுடன், எதுவும் நடக்காததுபோல, போவதைக் காணலாம். எப்படி இவரால் இப்படி இருக்க இயலுகிறதென்று பலதடவை பார்த்து நான் அதிசயித்ததுண்டு. குறிக்கோளை முன்வைத்துச் அதையே நோக்கிச் செல்வதால் அவரால் அப்படி இருக்க இயலுகிறதோ என்னவோ!

ஜெயா என்பவர் கெங்காவுக்கு மனைவியாக வாய்த்தமை ஒருவேளை இவரின் அரசியல், விளையாட்டு, இலக்கியத் துறைகளில் உள்ள ஈடுபாட்டுக்கு உதவியாக இருந்திருக்கலாம். ஏனெனில் எல்லா இடங்க ளிலும் கெங்காவின் பின்னால் அவரையும் பார்க்க முடியும். தருமம், தொண்டு என்பவை செய்யும்போது ஒருவன் தன் மனைவியுடன் செய்வதுதான் சாலச்சிறந்தது, முறையும் அதுதான் என்று சாத்திரங்கள் கூறும். அந்த வகையில் கெங்கா கொடுத்துவைத்தவர்.

கெங்காவைப் பார்க்கும்போது ஒரு நீதிநெறி விளக்கப்பாடல் நினைவுக்கு வரும். அந்தப் பாடல்:

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்

தன்னுடைய குறிக்கோளை அடைய விரும்புவோர் உடல் வருத்தத்தைப் பார்க்காது எவ்வளவு களைப்புற்றாலும் தமது வேலையை நிறுத்தமாட்டார்கள். பசி வந்தபோதும் அவர்களின் தொண்டு தொடரும். நித்திரை செய்யாது உழைப்பார்கள். மற்றவர்கள் சொல்லும் அவச்சொற்களைப் பொருட்படுத்த மாட்டார்கள். எதையும் அவமரியாதையாகக் கருதமாட்டார்கள். இந்தப் பாடல் கெங்காவுக்கு மிகவும் பொருந்தும் என்று நான் நினைக்கிறேன். அவர் 'கருமமே கண்ணாயினார்'.

நண்பர் கெங்கா மேலும் பல்லாண்டு நலமுடன் வாழ என்னுடைய குடும்பத்தின் சார்பில் வாழ்த்துகிறேன்.

**க. ஜெகதீஸ்வரம் பிள்ளை**

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Comrade Genga: A dedicated and indefatigable Political & Social worker

**Shanthan K. Thambiah**

**My Best Wishes to Comrade Genga for a very happy birthday and many morehappy returns of the day.**

I consider it as my pleasure to write this felicitation to Comrade Ganga; and I thank Janagan for giving me this opportunity. A grand get- together of his friends, comrades and fellow-travellers in celebration of his milestone birthday would have been very fitting for a person of Genga's calibre; but unfortunately could not be had due to the present pandemic situation. I vividly remember Genga's 60th birthday where a cross- section of the political and social activists working in the UK were gathered. Genga's long service to the community, his readiness to shoulder responsibilities and his unique ability to maintain friendship with all the people whom he comes across regardless of political affiliations, is abundantly evident in the many occasions and events he had organised at various times.

I think it is appropriate here to recall some of my memories of Genga and his activism during a crucial period of Sri Lankan diaspora political history in the UK. Genga is an able writer and a good public speaker. I hope that he will record his activities of that period for the benefit of the future generation.

As far as I remember, I met Genga in 1977 for the first time in Lewisham in his house. Yogasangary, myself and few others were actively organising 'General Union of Eelam Students (GUES)'. We used to have pocket meetings to lobby students and other interested youths to organise branches for GUES. We visited Genga as part of our meeting new people. He organised a group of students and youths to meet us in his house to have a general discussion about the situation in Sri Lanka and about the program of GUES. I think at that time he was engaged in discussions with another organisation called Tami's Liberation Organisation (TLO), and hence though not inclined in joining GUES, was, nevertheless, very receptive, cordial, and friendly. He also briefed us about his and the perspectives of his group. Since then, although we may agree or disagree or have different views on issues and approaches, we had always kept our friendship cordial, constructive and fruitful. In the late seventies, the Sri Lankan Tamil community in the UK was of only a few thousands. During that time, a new wave of students also started to arrive to pursue their higher studies. The few people who were politically and socially active during that time, knew each other well. Despite difference of political opinion, we would gather at venues such as India Club in Aldwych, or the Little Hall in Wimbledon for meetings and discussions. Genga was one of the pioneers who was always ready to take responsibility to organise and he would work indefatigably with dedication. Subsequently, Genga joined the Tamil Eelam Liberation Organisation (TELO)

and worked with them. In 1985, when four liberation organisations formed a united front, 'Eelam National Liberation Front (ENLF)', the representatives of these organisations in the UK also worked together. Genga actively engaged himself to work for the unity of all the liberation organisations. In April 1986, when TELO Leader Sri Sabaratnam and hundreds of cadres were brutally murdered, TELO and EPRLF jointly organised a public protest meeting

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in Conway Hall. Genga served well as the secretary of 'Eelam Solidarity Campaign (ESC)'-- an umbrella organisation of most of the active groups and prominent academics in the eighties. The ESC played a pivotal role in reaching out to the progressive politicians and activists in London, including Labour Party leaders such as Jeremy Corbyn. Other prominent non-sectarian organisations during that time, as far as I remember were, Standing Committee of Tamils (SCOT) led by Dr Arumugam, Mr Rajanayagam and few others and Tamil Information Centre (TIC) led by Mr Kanthasamy and few others. During that time there were always discussions amongst all on common actions. Genga always kept in touch with the Left Leaders in Sri Lanka. Whenever they visited London, he had hosted them and organised meetings for them so that they can meet and listen to the views of a wider section of the Tamil community. He will also encourage people from different organisations to meet them. Some of those Genga introduced to me was Professor Sivathambay and Comrade V. Ponnambalam when they visited London. Through Genga , the EPRLF organised discussions with them on the political situation that was attended by members and supporters. Sadly, the UK diaspora politics took a different turn in the mid-eighties reflecting the unfortunate and disastrous transformation that was taking place in Sri Lankan Tamil struggle. Terminologies such as 'sole-representatives' and 'traitors' were introduced in the body politic of Tamils, thus marginalising pluralism, cordiality, expression of different opinion and democratic approaches. The consequences of this became eventually and tragically evident in 2009 at an enormous cost to the Tamil people and their legitimate aspirations for the attainment for which they forged an armed struggle. In 1990, EPRLF leader Comrade Pathmanabha was assassinated with some of his comrades and we organised a public meeting to condemn the heinous killing and pay tribute to those whose youthful lives were cowardly snatched. I approached a few activists at that time to speak at that meeting. Many were hesitant to address; but S.D. Balarajah and Genga agreed to address that meeting. The other speakers in that meeting were prominent political and human rights personalities: Martin

Ennals, Upali Cooray, Chandrika Bandaranayake and EROS leader, Ratnasabapathy. Genga was also a member of the 'Campaign for Democracy and Justice in Sri Lanka (CDJSL)' which functioned until 2009. It was one of the leading campaign groups where all Sri Lankan communities were involved and actively worked for democracy and justice in Sri Lanka.

I wish Genga a long and healthy life to continue to serve our community and looking forward to the furthering of association and comradeship with him in the political and social tasks that lie ahead of us in the future too.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவை தக்க வைக்கும் கெங்கா

நண்பர் நாகலிங்கம் சிறீகெங்காதரன் அவர்களது 70வது அகவையையிட்டு வெளியிடப்படும் வாழ்த்து மலரில் எனது வாழ்த்துச் செய்தியையும் தெரிவிக்க கிடைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது.

கெங்காவுக்கும் எனக்குமான உறவு 1967ம் ஆண்டு மே மாதம் கண்டி மாவட்டத்தின் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியிலிருந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில்10ம் தரத்தில் சேர்ந்தபோது ஆரம்பமாகி இன்றுவரை தொடர்கின்றது. அவரைப்பற்றி நிறைய விடயங்களை எழுதுவதற்கு உரியவராக அமைந்திருக்கிறார்.

சுருக்கமாக கூறுவதானால் மிகவும் நல்ல மனிதர். எந்த நேரமும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்கின்றவர். பாடசாலைக் காலத்திலிருந்து இன்று வரை அவருடன் பழகியவர்களை மறவாமல், அப்போது எவ்வாறு பழகினாரோ அதே உறவை எப்படித்தான் தக்க வைத்துப் பேணுகிறார் என்பது வியப்பானதொரு விடயம். மிகுந்த ஞாபக சக்தி அவரிடமிருப்பது, இறைவனின் சிறப்பான அருள் என்றே கருத வேண்டும். ஏதாவது ஒரு வேலையை பொறுப்பெடுத்துக் கொண்டால், நல்ல திட்டங்களுடன் சிறப்பாக நேரத்துக்கு செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர்.

தமது 17வது வயதில் (1967) 'அம்பனை கலைப்பெரு மன்றத்'தின் இணைச் செயலாளர் பதவி வகித்தமையிலிருந்து இன்றுவரை எத்தனையோ அமைப்புக்களின் தலைவர், செயலாளர் பதவிகளை வகித்தவர். 1967ல் அவரது வகுப்பு நண்பர்களுடன் இணைந்து 'சூட்டிங் ஸ்ரார் விளையாட்டு கழக'த்தை ஆரம்பித்து யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகச் சிறந்ததொரு விளையாட்டு கழகமாக இயங்கச் செய்வதில் முக்கிய பங்கு வகித்தவர்.

1971ல் தானே ஆசிரியராகச் செயற்பட்டு, மகாஜனாவில் உதைபந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 1971ம் ஆண்டு வரை தகவல்களையும் ஆவணங்களையும் புகைப்படங்களையும் சேகரித்து நவம்பர் மாதம் "மகாஜன உதைபந்தாட்ட மலர்" ஒன்றை அச்சிட்டு அவ்வாண்டு யாழ்ப்பாண பாடசாலைகளின் முதலாம் பிரிவு சாம்பியன் போட்டியினன்று வெளியிட்டார். அருமையான தகவல்கள் அடங்கிய மலர் அது. அந்த மலர் காலஞ்சென்றவர்களானஅன்றைய விளையாட்டுத் துறை அமைச்சர் KP ரத்நாயக்க, அதிபர்கள் தெ து ஜயரத்தினம், மா.மகாதேவன் என்போர்களது ஆசிச் செய்திகளையும் உடையதாக அமைந்திருந்தது.

1971ம் ஆண்டில் மகாஜனா மைதானத்தில், கொழும்புக்கு வெளியே முதற் தடவையாக மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டிகளை வெற்றிகரமாக நடாத்தினார். மகாஜனா, ஸ்கந்தா, யூனியன் உட்பட நான்கு பழைய மாணவர் அணிகள் பங்கேற்றன. 1972ம் ஆண்டிலும் இதேபோல் இரண்டு நாட்கள் மின்னொளி உதைபந்தாட்ட போட்டிகள் இடம்பெற்றன. இதில் பழைய மாணவர் கோஷ்டிகளுடன், கழக கோஷ்டிகளும் கலந்து கொண்டன. இப் போட்டிகளில் மலையகத்திலிருந்து நானும் நண்பர் சிங்காரமும் மகாஜன பழைய மாணவர் அணிக்காக விளையாடினோம்.

நண்பர் கெங்கா 1975ம் ஆண்டு மேற் படிப்புக்காக ஐக்கிய இராச்சியத்துக்கு புறப்பட்டு சென்றார். அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் தந்தையை இழந்த கெங்கா, முழுக் குடும்பத்தவரையும் பொறுப்பேற்று, அவர்கள் ஒவ்வொருவராக ஐக்கிய இராச்சியத்துக்கு வரக்கூடிய வழிவகைகளையும் செய்யத் தவறவில்லை.

ஐக்கிய இராச்சியத்தில் மகாஜன பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டு சங்கம்(பின்னர் அது தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டு சங்கம் என பெயர் மாற்றம் பெற்றது) என்பன அமைய முக்கியமானவராக இருந்து செயற்பட்டார்.

அவரது திருமண வெள்ளி விழா நடைபெற்று சில நாட்களின் பின்னர் ஐக்கிய இராச்சியத்துக்கு சென்றிருந்த போது அவரது இல்லத்துக்கு சென்று அவரையும் மனைவி கௌரியையும் வாழ்த்தக் கூடிய வாய்ப்பு கிடைத்து. இந்த வருடம் பெப்ரவரி மாதம் 8ம் திகதி இலங்கையில் கலதாரி ஹொட்டலில் அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40வருட திருமண நாள் வைபவத்திலும் கலந்து கொள்ளக் கிடைத்தமை மிகப் பெரிய பாய்க்கியம். அந்த வைபவத்திற்கு உலகின் பல நாடுகளிலிருந்தும் சூட்டிங் ஸ்ராஸின் அங்கத்தவர்கள், அவரின் மகாஜன பழைய மாணவ நண்பர்கள்,1974ம் ஆண்டு மூனிச் ஒலிம்பிக்ஸில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட திரு சுனில் குணவர்த்தனா, அவரது மனைவி திருமதி பட்ரா குணவர்த்தன், இலங்கையின் மூத்த அரசியல்வாதி திரு வாசுதேவ நாணயக்கார முதலானோரும் கலந்துகொண்டார்கள்.

தற்போது நண்பர் கெங்கா தனது முகநூலில் "என் வாழ்வும் நான் சொல்லும் கதைகளும்" என்ற தலைப்பில் பாடசாலை நாட்களிலிருந்து தனது வாழ்வின் நினைவுகளை மிக அழகாக பகிர்ந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்.

79வது அகவையில் கால் பதிக்கும் நண்பன் கெங்கா இன்னும் பல வருடங்களுக்கு நல்ல உடல் நலத்துடன், குடும்பத்தாருடன் சந்தோசமாக வாழவும், அவரது சமூகப் பணிகளும் எழுத்துத் துறையும் சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல இறையை வேண்டுகிறேன்.

க. மோகன்ராம்

Captain 1969 JSSA Champion

●●●

## நீடூழி வாழ மனமகிழ்வோடு வாழ்த்துகின்றோம்!

அன்பு நண்பன் கெங்கா எழுபது அகவையில் கால் பதிப்பதை எண்ணிப் பூரிப்படைகின்றேன்

மகாஜனக் கல்லூரியில் அறிமுகமான கெங்கா அன்றைய இளமைத் துடிப்புடன் இன்றும் வலம் வருகின்றார்.

பல்லாண்டு தொடர நல்வாழத்துகள்.

எழுபது வயது வாழ்வில் கனிவான காலம். மானிட வாழ்வோட்டத்தில் இனிமையான தென்றல் வீசும் பருவம். எழுபதுஆண்டுப் பயணத்தில் அனுபவித்த இன்ப துன்பங்கள், வெற்றி தோல்விகள் அனைத்தையும் இரைமீட்டு, இன்புற்று மகிழந்து குலவும்சமயம்.

கடந்து வந்த வாழ்நாட்களில் கெங்கா ஆற்றிய பொதுப்பணிகள் மிகவும் பாராட்டுக்குரியன.

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க லண்டன் கிளை ஸ்தாபகரில் ஒருவராக இருந்ததோடு 32 வருடங்களுக்கு மேலாக இச்சங்க நிர்வாகத்தில் இணைந்து செயலாற்றி வருகின்றார். மேலும் மிகுந்த ஆரோக்கியத்துடன் மானிடர் இன்புற நல்ல பல தொண்டுகள் செய்து அன்புநிறைந்த மனைவி பிள்ளைகளோடு நீடூழி வாழ மனமகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

அன்புடன்

**கருணைவேல் யோகினி குடும்பம்**
**பிரான்ஸ்**

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெங்கா வித்தியாசமானவர்

'அம்பனைக்கு முன்னால் அடிக்கின்ற வயற்காற்றை 24 வருடங்கள் அனுபவித்தபடி எங்கள் வீட்டுமுன் விறாந்தையில் துயில் கொண்டவன் நான்'
நாக ஸ்ரீ கெங்காதரன் அவர்கள் வயற்காற்று முன்னுரையில் பதிவு செய்தது.
தெல்லிப்பளை காங்கேசன்துறை, மயிலிட்டி வடக்கு வலிகாம மரபொன்றுள்ளது அது பல மாண்புறும் மனிதர்களை உருவாக்கியது.. வடமராட்சி கரவெட்டி போல.
குறிப்பாக மகாஜனா, யூனியன், நடேஸ்வரா என கல்லூரிகளும் முற்போக்கான மாணவர் பரம்பரை ஒன் றின் சுற்றாடலாக இவை யாழ் குடாநாட்டின் உபதேசியங்களாக அமைந்தன எனக்கருதலாமா?
ஏறத்தான 30 ஆண்டுகள் இராணுவ ஆக்கிரமிப்பு வலயங்களாக மாறியதால் வடக்குவலிகாமத்தின் வாழ்வும் பண்பாடும் சிதைந்தழிந்தபோது இதன் மக்கள் வேரறுந்த மரங்களாக வாழவேண்டிய நிலை. இந்த சுனாமியின் தாக்கம் இன்னும் ஓயவில்லை. ஆனால் இதேபோல வடக்கில் இருந்து பெயர்த்தெறி யப்பட்ட முஸ்லீம்மக்கள் பெரும்பான்மை ஊர்திரும்பும் நிலை இன்னும் உருவாக்கப்படவில்லை.
நிச்சயமாக இங்கும் மகத்தான இலக்கியங்கள் உருவாகியிருக்கும்.
இந்த இவை போன்ற அவல சரிதங்கள் முறையாக தொகுக்கப்பட வேண்டும்.
தோழர் கெங்காவிடம் சமூக பிரக்ஞையுடனான முற்போக்கு சிந்தனையும் செயற்பாடும் அமையப்பெற்றன.
'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்ற உலகியல் யதார்த்தப்பார்வை இருந்தது. தமது ஊர் சுற்றயலின் பாவலர் துரையப்பா பிள்ளையில் இருந்து சமூகத்தில் பரவலான வெவ்வேறு ஆளுமைகள் பற்றிய பெருமித உணர்வு.

எமது இடது முற்போக்கில் காணப்படும் தீராத வியாதியான கோஸ்டி மனநிலை அவரிடம் இருக்கவில்லை. வேரறுக்கப்பட்ட ஊர் அந்த மனநிலையை உருவாக்கியதோ என்னவோ.
1990 களின் நடுப்பகுதியில் தீவுப்பகுதிக்கு தேர்தல் பணிக்காக சென்ற நேரம் கொல்லங்கலட்டியில் படைமுகாமினுள் கொலங்கலட்டில் தங்கவைக்கப்படடோம். மனிதர்கள் வாழந்ததற்கான அடையாளங் கள் அணிக்கப்பட்ட பூமியில் ஒரு இடிந்த கட்டிடத்தின் கலட்டி, செஞ்சிலுவை என்ற எழுத்துக்கள் காரைகளினூடாக அரைகுறையாக தெரிந்த கட்டிடத்தில்.
ஏனோ மனதில் 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே' என்ற பாடல் வரிகள் ஓலமிட்டன.
ஊர் என்பது அங்கு வாழ்ந்த மனிதர்களின் வெற்று நிலமல்ல. அது வாழ்வின் இரத்தமும் தசையும் நரம்பு மண்டலமுமானது.
தமது சொந்த வாழிடங்களில் இருந்தது வேரறுக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் அப்படித்தான.
வாழ்வின் தொடர்ச்சி அறுபட்டநிலையில் அந்த தடத்தை அறிவது மீள் நிறுவுவது பல ஆயிரம் வருட வரலாற்றை தேடுவது போல் ஆகிவிடுகிறது
தற்போதை காங்கேசன்துறை - தொண்டமனாறு வீதியில் செல்லும் போது ஒரு இனம் புரியாத சிலிர்ப்பும் துயரமும் ஏக்கமும் மனதில் மண்டிவிடும்.
கெங்கா இதன் நீள அகலங்களில் ஊரின் வாசனையை நுகர்ந்து கொண்டு ஒரு பொதுவுடைமை வாதியாக வாழந்திருக்கிறார்.
24 ஆண்டுகளின் பின் அந்த ஊர்வாழ்வு அம்பனையில் அடிக்கின்ற வயற்காற்று பேரேக்கம் வெப்பியா ரத்து டன் அவர் ஒரு புலம்பெயர் மனிதராக வாழ்கிறார்.
அவருடைய சகோதரர் சபேசனும் தனது மூத்த சகோதரரின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்.

முற்போக்கு எண்ணம், சமூக பிரக்ஞை கொண்ட சகோதரர்கள்.
'புதுசு'இலக்கிய சஞ்சிகையை தனது தோழர்களுடன் அலுக்காமல் சலிக்காமல் வெளிக்கொணர்ந்து பல்கலைக் கழக சுற்றயலில் வினியோகித்து அலைந்தது இன்னும் என் மனக்கண்ணில்.
எமது பிரசுரம் ஒன்று உண்ணாவிரதம் இருந்த பல்கலைக்கழக மாணவர்கள் கடத்தபட்ட சமயத்தில் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையங்கம் மறந்து விட்டேன். '-----மாணவர்களை கடத்தியது ஆராஜகமே' என்று முடிவடைகிறது . அந்த பிரசுரத்தை இன்று வரைதேடுகிறேன். சபேசன் அந்த பிரசுரத்தை பாராட்டியது ஞாபகம். அத்தருணத்தில் அது மிகுந்த மன நிறைவைத் தந்தது.

இந்த சகோதரர்களின் இடது பாரம்பரியத்திற்கு காங்கேசன்துறை தொழிற்சாலை தொழிலாள விவசாய, கடற்தொழில் மக்களின் சூழ்நிலை, தீண்டாமைக்கெதிரான மாவிட்டபுரம் உக்கிரமான போராட்டங்கள் பங்களித்திருக்கும்.

சமூக அநீதிகள் ஆழமாக வேரோடிய சமூகத்தில் மீறல்களை காட்டுபவர்கள் கவனத்திற்குரிய மனிதர்கள்.

அப்படி ஒரு பன்முக மரபு இருக்கிறது. கெங்கா அந்த மரபைச் சேர்ந்தவர்.

ஒரு முக்கியமான கால கட்டத்தில் வாழ்கிறோம்.

இரண்டு தலைமுறை மாண்டு போனது. புலம் பெயர்ந்து சென்றவர்களின் தலைமுறைகள் ஊரும் உறவுமாக வாழ்வார்கள் என்றில்லை. அது உலகியல் யதார்த்தம். பிரக்ஞைபூர்மான ஊர் நேயம் கொண்டோர் சிறுபான் மையினரே. தீவுப்பகுதி உட்பட பல பாலை வெளிகளாகும் ஊர்கள் அதனை உறுதிப்படுத்துகின்றன.

அம்பனைக்கு முன்னால் அடிக்கின்ற வயற்காற்றை இன்றளவில் மானசீகமாக சுவாசிக்கின்ற ஸ்ரீ கெங்கா வித்தியாசமானவர்.

வாழ்த்துக்கள்!

**திருநாவுக்கரசு சிறீதரன் (சுகு)**

●●●

I am very happy note that Srigengatharan younger days called Manon has reached Seventies and we are all very proud of him. Throughout he was a very good interesting personality involved in social and political activities. He was always liked by everyone in society. He through worked with the people in many levels. His leadership qualities should be appreciated. His progressive ideas made him to achieve many goals In sports to he created a new wave in our village.

**A Sivanesachelvan**

Former Editor in cheaf Veerakesari, Thinakkural

●●●

## நட்பின் பாங்கு

இழந்ததை மீட்டெடுத்துவிட இயலுமா? 'கையறுநிலை' என்கின்ற இதுதான் இலங்கைத் தமிழர் நிலையாகியபோது, புலம்பெயர் தேசங்களில் இந்த மீட்டெடுப்பில் விசுவாசமான கரிசனையோடும் பல்வேறு எழுந்தமான எண்ணங்களோடும் பல செயல்பாடுகள் எழுந்தன. அவை, அவையவற்றின் விளைவுகளையும் காண்பித்தன.

இச் செயல்பாடுகள் தொடர்கின்றன. இவை. இன்னமும் அவசியமானவையாகவும் இருக்கின்றன.

ஆக, இந்த நிலைமையைப் புரிந்த ஒருவர், நண்பர் நாக. சிறிகெங்காதரன். அந்தப் புரிதலில் அவரும் தன் பங்கை ஆற்றுகிறார்.

எழுபது ஆண்டுகள் நிறைவைக் காணும் அவரது நட்பு பாராட்டும் பாங்கு தனியானது.

மனதுவந்த மனைவி, குடும்பத்துடன் அவர் சுகத்தோடு வாழவேண்டும் என்று மனதில் மகிழ்ச்சி நிறைகிறது.

அன்புடன்,

**- மாலி**

*(ஊடகவியலாளர்)*

*06.12.2020*

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வேறுபாடுகளே நட்பின் பேரழகு"

## ப வை ஜெயபாலன்

இன்று நண்பன் கெங்காதரனுக்கு வயது எழுபது. எங்களுக்கிடையிலான நட்பு 15வயதில் ஆரம்பித்தது. வேற்றுமைகளுக்கு இடையிலே உள்ள ஒற்றுமைகளை இறுகப் பற்றியது இவருடனான நட்பு. விட்டுக்கொடுப்பில் கெங்கா காட்டுகின்ற அக்கறையே எங்கள் நட்பு பட்டுப்போகாது தொடரக் காரணம் என்பதை மனதார நான் ஒத்துக் கொள்கிறேன். கெங்காவின் மனப்பாங்கில் பெரும் பங்காற்றும் உதவும் பண்பும் அவர் நட்பு வட்டம் வியாபகமாக வேரூன்ற ஒரு காரணம்.

எங்கள் அம்மம்மாவுக்கும் கெங்காவின் தந்தை வழி பேர்த்திக்கும் நெருங்கிய நட்பு. அந்த நட்பு அம்மாவுடனும் எங்களோடும் தொடர்ந்ததை சிறு வயதிலேயே அறிந்திருந்தேன். கெங்காவின் தந்தையார் நாகலிங்கம், அவர் தமையனார் எங்கள் அயலவர் சபாபதி ஆகியோர் எங்கள் குடும்பத்தோடு நெருக்கமான உறவாளர்கள். எனக்கும் கெங்காவுக்கும் இடையிலான உறவு வளர இதுவும் ஒரு பாலம் எனலாம். மகாஜனப் பள்ளிக்கு அருகிலிருந்த கெங்கா வீட்டுக்கு அடிக்கடி போவோம். அந்த என் சிறுபராயத்தில் தெல்லிப்பழைச் சந்தியில் பஸ் எடுத்துத்தான் யாழ் நகருக்கு போகவேண்டும். யாழ் நகருக்கு பஸ் கட்டணம்18சதமாக இருந்த காலம். கலரி ரிக்கற் 65சதம். அண்ணைமார் அயலவர்களோடு படம் பார்க்க யாழ் நகர் போவதும் இவர்களது படலையைத் தாண்டித்தான்.

சாரணீய இயக்கம் கெங்காவின் தொடர்பை பள்ளி நாட்களில் நெருக்கமாக்கிய இன்னொரு அம்சம். அம்பனை கலைப்பெரு மன்றம், சூட்டிங் ஸ்ரார் விளையாட்டு கழகம் என சமூகக் கழகங்களின் ஈடுபாடு நட்பை, நாளாந்த சந்திப்பு என்ற நிலைக்கு வளர்த்தது. ஆழமான சமூக அக்கறை, சிறுமை கண்டு பொங்கும் இயல்பு என்ற எம்மிருவரின் பொது இயல்பு, சாதனை செய்யவேண்டும் என்பதில் இருந்த வெறி உள்ளத்தால் எங்களை ஒன்றுபடுத்தியது எனலாம்.

அரசியலில் நான் தீவிர தமிழரசுக்கட்சிக்காரன். அவர் கம்யூனிஸ்ட். 1970ல் சிறீமாவோவின் வெற்றியின் பின் வந்த புதிய அரசியலமைப்புக்கு நான் எதிரானவன். அவர் ஆதரவாளன். நான் கறுப்புக் கொடி கட்டுபவன். அவர் தேசியக்கொடி ஏற்றுபவர். எனக்கு நல்ல நினைவு, அந்த அரசின் சுகாதார அமைச்சர் பலாலி விமான நிலையத்தில் வந்து இறங்குகிறார். இவர் தன் வீட்டிலிருந்து மாலையோடு வரவேற்கப் போகிறார். இவரைச் சந்தித்துவிட்டு நான் கறுப்புக்கொடி காட்டப் போகிறேன். இருவரும் ஒன்றாகப் போய் மல்லாகத்தில் நான் என் கட்சிப் பணிமனைக்குப் போக, அவர் தன் கட்சிப் பணிமனைக்குப் போவார். மாலைவேளை தெல்லிப்பழை நூலகத்துக்கு போவோம். பின்னர் இவர் தன் அன்றைய மைத்துனியும் இன்றைய மனைவியுமான ஜெயா வீட்டுக்கு போவார். நான் அருகிலிருக்கும் நண்பர் வீட்டுக்கு போவேன். கட்சி விவாதம் என்று வந்தால் பேச்சில் அனல் பறக்கும். அடுத்த கணமே அவர் வீட்டில் போய் அருந்தும் தேனீரோடு அது ஆறிவிடும்.

தன் மன ஆளாக இருந்த ஜெயாவை மனையாளாக்கி லண்டன் அழைத்துச் செல்லும் நோக்கோடு அவர் தன் தந்தையைப் பார்க்க வந்தார். அவர் வருகைக்கு சில மணிநேரம் முன்பாக தந்தை இறந்து விட்டார். ஆயினும் ஜெயாவை அப்போதே கூட்டி வருவதில் உறுதியாக இருந்தார். ஆனால், அவர் குடும்பத்தில் இருந்த அசாதாரண சூழ்நிலையை ஒரு நள்ளிரவு வரை விளக்கினேன். என் ஆலோசனையை ஏற்றார். தன் முடிவை மாற்றினார்.

சூட்டிங் ஸ்ரார் விளையாட்டு கழகத்தின் மின்னொளி உதைபந்தாட்ட போட்டி, வருடாந்த மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி, கலைப்பெரு மன்றத்தால் சில காலம் கொண்டாடப்பட்ட பிரமாண்டமான உழவர் விழா, வைரவர் ஆலய திருவெம்பாவை நிகழ்வுகள் என்பவற்றிலும் தொடர் நாடகத் தயாரிப்புகள், நாடகப் போட்டிகளின் தொடர் வெற்றிகள் என்பவற்றிலும் கெங்காவின் பங்களிப்பு முத்திரை பதித்தது.

நான் லண்டன் வந்ததும் தேடி வந்து, என்னை தன் லெஸ்ரர் எரிபொருள் நிலையத்தில் தொழிலைப் பழக்கி, வழிகாட்டியது மறக்கமுடியாதது. இங்கும் பல வழிகளில் அவர் நட்பு குடும்பமாக தொடர்கிறது.

மகாஜனா என்றால் கெங்கா என்பது அவரது தன்னலமற்ற உழைப்பால் குத்திய முத்திரை.

இன்றும் நன்றியுணர்வோடு நானும் மனைவி பிள்ளைகளும் எண்ணிப் பார்க்கிறோம்.அவர் சுகநல தேகியாக நூற்றாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் மகிழ்ந்திருங்கள்

அன்பிற்குரிய திரு.நாக. சிறீ கெங்காதரன் அவர்கள் தனது எழுபதாவது பிறந்த நாளை கொண்டாடும் இவ்வேளை அவரை நானும், மனைவியும், பிள்ளைகளும் இணைந்து வாழ்த்துவதில் மகிழ்ச்சி கொள்கின்றோம்.

நாக.சிறீகெங்காதரன் என்று விளிப்பதைவிட மனோன் என்று விளிப்பதிலும் அழைப்பதிலும் ஒரு நெருக்கம் இருப்பதாக நாங்கள் உணர்கின்றோம்.

அவர் எனது மனைவியின் மைத்துனர் என்ற உறவு முறையின் தொடர்பால் ஏற்பட்ட புரிதலுக்கு முன்னரே அவரும் நானும் பொதுவாழ்வில் இணைந்து பயணித்த வேளை அவரிடம் காணப்பட்ட பொதுவாழ்வுக்குரிய உயர்ந்த பண்பை நான் பார்த்து மகிழ்ந்திருக்கின்றேன்.

அதே வேளை மனோன் அவர்கள் எனது மனைவியின் ஒன்றுவிட்ட மைத்துனராக இருந்த போதிலும் எனது மனைவியின் நேரிடை மைத்துனர் என்று விளிப்பதற்குக் காரணம் உங்களுடைய தாயார் எனது மனைவியின் தந்தையை சொந்த அண்ணனாக அண்ணை என்று பாசத்தோடு அழைப்பதை பலமுறை நானே நேரிடையாகக் கண்டிருக்கிறேன்.

எனது மனைவியும் சிவகெங்கை மாமி என்று சொல்லி அவர் தன்னில் பாசம் காட்டிய நினைவுகளை என்னுடன் பகிர்ந்து கொள்வார்.

இலண்டனுக்கு எனது மனைவி வரும்போது அதிகம் மகிழ்ச்சியடைவார்.காரணம் தனது இரத்த உறவுகளை சந்திக்கப் போகிறேன் என்ற மகிழ்ச்சி அவரிடம் இருக்கும்.

பொதுவாழ்வில் மனோனிடம் காணப்பட்ட சனநாயகப் பண்பை கலைப்பெருமன்ற நடவடிக்கையில் கண்டிருக்கிறேன்.கலைப்பெருமன்ற நிர்வாகக் குழுவில் இருந்தவர்களில் அவர் ஒருவரே பொதுவுடமைக் கொள்கையை ஆதரிப்பவராக இருந்தார்.

ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாக கலைப்பெருமன்றம் திட்டமிடும் நடவடிக்கையில் திட்டமிடும் முறைமையில் அவர் தனது அதிருப்தியை வெளியிட்ட போதிலும் பெருபான்மையோரின் முடிவுக்கு மதிப்பளித்து நிகழ்ச்சி சிறப்பாக அமைய முதல் ஆளாக நின்று ஒத்துழைத்த சனநாயக பண்பினை நான் அவதானித்திருக்கிறேன்.

மாவை சேனாதிராசா தமிழரசுக்கட்சி அங்கத்தவராக இருந்த போதிலும்கூட இளைஞனாக இருந்த அவரை கலைப்பெருமன்றத்தின் முதலாவது உழவர் விழாவில் பிரதம விருந்தினராக அழைப்பதற்கு முன்மொழிந்தவர் மனோன் அவர்கள்தான் என்பதையும் அதுதான் மாவை சேனாதிராசாவின் முதலாவது பொதுமேடை உரை என்பதுமாகும்.

அவரின், செய்யலாம் செய்து முடிப்போம் என்ற தன்னம்பிக்கையான ஆளுமை காரணமாக சூட்டிங் ஸ்ரார் என்ற பெயரில் விளையாட்டுக்கான அமைப்பினை உருவாக்கி உதைபந்தாட்டப் போட்டி கிரிக்கட் போட்டிகளை நடத்தியமை மட்டமல்ல, மின்விளக்கு வெளிச்சத்தில் இரவு நேர உதைபந்தாட்டப் போட்டியை நடத்தியமை அன்றைய காலத்தில் அதுவும் அம்பனை என்ற சின்னக் குறிச்சியில் அது அசாதாரணமான செயலேயாகும்.

அதே போல அம்பனைக் குறிச்சி என்ற இடத்தில் கிட்டதட்ட இருபத்தைந்து குடும்பங்கள் மட்டுமே பங்குபற்றிய அம்பனைக் கலைப்பெருமன்றத்தின் அளப்பரிய செயல்பாடுகளில் மனோன் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பங்களிப்பு இருந்தது மட்டுமல்ல பல நிகழ்ச்சிகளை திட்டமிடுவதில் அவரின் நுட்பத்தினையும் அவதானித்திருந்தேன்.

அன்று பலரின் அவதானத்துக்கு உட்படாத பல விடயங்கள் இன்றைய காலத்தில் அதனை ஒப்பிடும் போது, இதனை அன்றே நாங்கள் செய்துவிட்டோமே என்று எண்ணி மகிழ்கிறோம்.

ஐரோப்பிய நாடுகளில் பத்திரிகைகளுக்குள் விளம்பரங்களை வைத்து அவை அனைவருக்கும் போய்ச்சேரும் உத்தியை விளம்பரதார்கள் இன்று செய்து வருவதைக் காண்கிறோம்.

அதனை அன்றே நாம் செய்திருக்கிறோம். பொன்னையா மாமாவின் புத்தகக் கடைக்குச் சென்று கலைப் பெருமன்றத்தின் நிகழ்ச்சி அழைப்பிதழ்களை அவரின் அனுமதியுடன் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குள் வைத்து பத்திரிகை சஞ்சிகை வாசிப்பவர்களுக்கும் கலைப்பெருமன்றத்தின் கலை,இலக்கிய,சமூகச் செயல்பாடுகளின் தாற்பரியங்களை அறியச் செய்திருக்கிறோம்.

இப்படியும் ஒரு வழியிருக்கிறது என்றதை எமக்குச் சொன்னவர் மனோன் அவர்களே.நானும் மனோன் அவர்களுமே அதனைச் செய்திருக்கிறோம்.

உறவுகளைப் போற்றுவதிலும்,உறவு முறையானவர்களை அறிந்து மகிழ்வதிலும் அவர்களுக்கு முன்னின்று உதவிகளைச் செய்வதிலும் மனோன் அவர்கள் தனித்துவமாக இருந்து வருகிறார்.
மனைவி சொன்னதையும் இங்கே பதிவு செய்கிறேன்.மனோனின் எழுபதாவது பிறந்த நாளுக்குச் சபேசன் வாழ்த்துச் செய்தி கேட்டிருக்கிறார் என்று மனைவியிடம் சொன்னவுடன், அவர் மகிழ்ச்சியோடு சொன்னார் உடனடியாக வடிவாக எழுதி அனுப்புங்கள் என்று

எமது பிள்ளைகளும் மனோன் மாமா என்று விளித்துக் கதைத்து மகிழ்பவர்கள்.அவர்களையும் இவ்வாழத்துச் செய்தியில் இணைத்துக் கொள்கிறோம்.

மனோன் என்று எழுதுவதில் உறவின் நெருக்கம் இருப்பதால் அன்புடன் மனோன் அவர்களுக்கு எங்களுடைய இனிதான அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

மனைவி ஜெயா,மகன் ஜனகன், சகோதர சகோதரிகள் அவரவரின் குடும்பங்களுடன் நீடித்த உறவுகளுடனும் என்றும் மகிழ்ந்திருங்கள் வாழ்க வாழ்க வாழ்கவே.

அன்படன்

**திரு.திருமதி முருகதாசன் லைலா தம்பதிகளும் பிள்ளைகளும்**

*ஜேர்மனி 2020*

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணி சாரணர் (Queen Scout), கொள்கை வீரன் கெங்கா தந்த பாடம்

*1966ம்* ஆண்டு ஆறாம் வகுப்பில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்க தொடங்கி அவ் வருடமே குருளைச் சாரணனாக (Cup Scout) என் சாரணீய வாழ்வை ஆரம்பித்து இராணி சாரணனாக (Queen Scout) வரும் வரை எனக்கு மூத்த சாரணனாக இருந்து இன்று அகவை எழுபதை அடையும் கெங்கா என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. நாகலிங்கம் சிறீகெங்காதரன் அவர்களிடம் என் உடன்பிறந்த அண்ணனைப் போன்று மதிப்பையும் மரியாதையும் அன்பையும் பதித்தவன் நான்.

அன்று பதித்த அன்பும் மரியாதையும் உறவும் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக இன்றும் தொடர்கின்றது. ஆனாலும் அரசியலில் அவர் அன்று தொட்டு இன்று வரை என் விரோதி ஆவார். அரசியலில் அவரின் கொள்கையுடன் மாறுபட்டவன் நான்.

**கெங்கா ஓர் மெழுகுவர்த்தி**

திரு. கெங்கா அவர்கள் தன்னைப்பற்றியும் தன் குடும்பத்தை பற்றியும் சிந்திப்பவர் அல்ல. தனக்காக எதையும் சேர்த்தவர் அல்ல. கனவிலும் நனவிலும் பிறர் நன்மை பற்றி சிந்தித்து செயலாற்றுவது தான் அவரின் வாழ்வின் குறிக்கோள். பிறருக்காக அவர் செலவுசெய்த நேரத்தையும் பணத்தையும் தனக்காக செலவு செய்திருந்தால் அவரின் வாழ்வு இன்று ஏணி வைத்து ஏறினாலும் எம்மில் பலரினால் பிடிக்க முடியாது என்பது தான் உண்மை.தான் படிக்கவேண்டிய காலம் தொட்டு பணம் சேர்க்கவேண்டிய காலம் வரை அவர் தன்னை பிறர்க்கே அர்ப்பணித்தார். இலங்கையிலும் இங்கிலாந்திலும் பிறரின் நன்மைக்காக அவரால் தனிப்படவும் பிறருடன் சேர்ந்தும் தொடக்கப்பட்ட பொது ஸ்தாபனங்கள் எண்ணில் அடங்காது. வாசிகசாலைகள், கலை பெரும்மன்றங்கள் விளையாட்டு கழகங்கள், அரசியல் கட்சிகள், பழைய மாணவர் சங்கங்கள், தர்ம ஸ்தாபனங்கள், ஆலயங்கள் மனித உரிமை அமைப்புக்கள், சர்வ தேச மகாநாடுகள் என அவரால் தொடங்கப்பட்டு அங்கத்துவம் வகிக்கப்பட்டு தலைமை தாங்கி நடாத்தப்பட்ட அமைப்புக்குள் எண்ணில் அடங்காது.

**எதிரிகளும் மதிக்கும் கெங்கா**

அவரின் மனித நேயம் நிறைந்த இயல்பும் தான் கொண்ட கொள்கையில் எந்தவித சந்தர்ப்ப வாதமும் இல்லாத தன்மையும் ஆயிரக்கணக்கான மனிதர்களை, இலட்சிய புருஷர்களை, கல்விமான்களை, கொள்கைவீரர்களை அவரின் எதிரிகளை, மாற்று கருத்தாளர்களை அவர்பால் கவர்ந்து இழுத்துள்ளது. தான் தோற்று போவேன் என்று அறிந்தும் தனது உயிருக்கு ஆபத்து என்று தெரிந்தும் பெரும்பான்மையான தமிழர்கள் தன்னை ஆதரிக்கவில்லை வெறுப்பர்கள், வெறுக்கின்றார்கள் என்று தெரிந்தும் தான் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கின்ற உத்தமன் அவர்.

சுருக்கமாக சொன்னால் தமிழ் ஈழத்தில் நம்பிக்கை இல்லாத இடதுசாரி கொள்கை உடைய தந்தைக்கு மகனாக பிறந்து இன்றுவரை அதே கொள்கையுடன் வாழ்ந்து வருபவர்.

தென் இலங்கை அரசியலின் பெரும் புள்ளிகள் பலர் இவரின் நண்பர்கள் அவர் நினைத்திருந்தால் தனதும் தன்னை சேர் ந்தவர்கனினதும் பதவியையும் அந்தஸ்தையும் உயர்த்தும் வகையில் எத்தனையோ சுய லாபங்களை பெற்றிருக்கலாம் அதை அவர் செய்யவில்லை. அது தான் கொள்கை வீரனுக்கு அழகு.

மாறாக தமிழ் ஈழம் கோரி மக்களின் முன் தம்மை இலட் சிய வாதிகள் போல காட்டும் முகமூடியை அணிந்து சுயநலம் பெற்று முள்ளிவாய்க்காலின் முடிவின் பின் தமது முகமூடியை மாற்றி இலங்கை அரசிடம் நன்மை பெற்ற பலரை நாம் எல்லோரும் அறிவோம். கொள்கை வீரன் கெங்காஅவர்கள் தனது கொள்கைகளில் உறுதியாக நிற்பதால் அன்று தோல்வியின் பக்கம் நின்ற அவர் இன்றும் தோல்வியின் பக்கமே நிற்கின்றார்.

**தொண்டர்களை கைவிட்ட தோழர் வீ. பொன்னம்பலம்**

*1975ம்* ஆண்டு காங்கேசன்துறை இடைத்தேர்தலில் என் வாழ்வில் முதன் முறையாகவும் கடைசி முறையாகவும் திரு கெங்கா அவர்களுடன் முரண்பட்டேன். தந்தை செல்வாவை (Late Mr S J V CHELVANAYAGAM - TULF ) ஆதரித்து நானும் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த காலம்சென்ற திரு வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலம் அவர்களை ஆதரித்து அண்ணன் கெங்கா அவர்களும் எமது இரு வேறு அணிகளுடன் சேர்ந்து வீடுவீடாக வீதிவீதியாக சென்று பிரச்சாரம் செய்தோம். அந்த வேளைகளில் எல்லாம் இருவரும் கொள்கை முரண்பாடுகளில் முட்டி மோதிக்கொண்டோம்.

ஒற்றை ஆட்சியில் நம்பிக்கை கொண்ட அவரின் தலைவரான காலம் சென்ற தோழர் வி . பொன்னம்பலம் அவர்கள் இடைத்தேர்தலில் தோல்வியுற்றதும் தனது முகமூடியை மாற்றி தேர்தலில் சிங்களத்தையும் பௌத்த மத்தையும் முதலாம் இடத்தில் வைத்த புதிய அரசியல் யாப்பை (1972) தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்ற தந்தை செல்வாவின் கோரிக்கையை எதிர்த்து தான் போட்டியிட்டாலும் தனது மனச்சாட்சிக்கு எதிராக வாக்களிக்க முடியாததால் தனது வாக்கை அவருக்கே அளித்தேன் என்கிறார்.

தன் தலைவன் தடம் புரண்டாலும் தொண்டனான திரு கெங்கா அவர்கள் எந்த கட்டத்திலும் தடம் புரளவில்லை.

**வேற்றுமையில் ஒற்றுமையும் ஒற்றுமையில் வேற்றுமையும் காண்பவர் கெங்கா**

மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று மனிதர் பலர் உணருவதில்லை. ஒருவன் எதிரியாயின் அவனிடம் உள்ள அனைத்துமே தவறு என்றும் ஒருவன் நண்பனாயின் அவனிடம் உள்ள அனைத்துமே சரி என்றும் நம்பி வாதிடுவர் மூடர்கள். இத்தகைய மூடத்தன்மை எள்ளளவும் இல்லாதவர் திரு கெங்கா அவர்கள். மாற்று கருத்தாளர்கள் திரு கெங்கா அவர்களை பெரிதும் மதிப்பதற்கு இத்தகைய அவரின் சிறப்பியல்பும் ஓர் காரணம் ஆகும். திரு.கெங்கா அவர்களின் இத்தகைய சிறப்பு குணங்கள் காரணமாக என்னால் ஒழுங்குபடுத்தப்படும் தனிப்பட்ட நிகழ்விலும்சரி பொது நிகழ்விலும் சரி அவருக்கு முதன்மையான இடத்தை கொடுக்க நான் தவறியதில்லை.

**மலை கலங்கினாலும் நிலை கலங்காத கெங்கா ஓர் பாடம் ஆகும்**

கெங்கா அவர்களின் மன துணிவும் தைரியமும் அவரை அறியாதவர்களை வியப்பில் ஆழ்த்தும். அவர் தோல்வியை கண்டு துவண்டவர் இல்லை, வெற்றியை கண்டு குதூகலித்தவர் இல்லை, வெருட்டலை கண்டு மருண்டவர் இல்லை, தனது வெற்றிக்கு தான் தான் காரணம் என்று கூறியவர் இல்லை, தனது தோல்விக்கு மற்றவரை குறை கூறியவர் இல்லை, தன் எதிரியை வஞ்சம் தீர்க்க நினைத்தவர் இல்லை.

நாடு இழந்து, நகர் இழந்து, மகனை இழந்து, மயானத்தில் காக்கும் வேளைதனில் தன் மனைவியையும் இழக்க துணிந்த அரிச்சந்திர மகாராஜாவிற்கு இருந்த அந்த துணிவும் தெளிவும் உறுதியும் கொள்கை பிடிப்பும் கொண்டவர் கொள்கை வீரன் கெங்கா அவர்கள். அவர் துவண்டு நிற்போருக்கும் மனம் சோர்ந்தவர்க்கும் தன்னம்பிக்கை இழந்தோர்க்கும் கலங்கரை விளக்காக இருக்கும் ஓர் பாடம் ஆகும்.

**வாழ்க மாமனிதர் கொள்கை வீரன் கெங்கா**

பிறரை ஏமாற்றி ஏப்பம் விடுகின்ற சுயநல வாதிகளும் மக்கள் நலம் மக்கள் நலம் என்று கூறி தமது மக்களின் நல்லத்தையே நாடுகின்ற கயவர்களும் மலிந்த இந்த உலகத்திலே திரு. கெங்கா போன்று தமது உடல், பொருள், ஆவி, சிந்தனை அனைத்தையுமே பிறருக்காக அர்ப்பணிக்கும் மாமனிதர்களும் மனிதருள் மாணிக்கங்களும் மிகவும் அருமையே. இன்று தனது எழுபது வயதை அடைந்துவிட்ட கெங்கா என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. நாகலிங்கம் கெங்காதரன் அவர்கள் எல்லா நலனும் பெற்று நீண்ட காலம் வாழ்ந்து மக்களுக்கான சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

**வாழ்க மாமனிதர் கொள்கை வீரன் கெங்கா அண்ணா.**

**அன்புடன் தம்பி**

**சுப்பிரமணியம் சிறீகாந்தலிங்கம்**

சட்டத்தரணி, இங்கிலாந்து

21/12/2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HAPPY 70th BIRTHDAY GENGA

It is almost 30 years since I have met a gentle giant at the Jaffna Schools Sports Association (UK) - JSSA (UK) inauguration meeting in 1992 at Wimbledon. I never thought I will find a very good friend for the last three decades on that day.

It gives me great pleasure to say a few words above Mr Nagalingam Sri Gengatharan – "GENGA", a person who lives with principles. He always says without any hesitations to put across his views for the betterment of any organisation he involves with.

I respect and appreciate, that he never brings his personal believes and aspirations to deviate any of the organisational objectives he involved in. I have been working very closely with Genga, all these years in all the Tamil Schools Sports Association (UK) - TSSA (UK) activities and surprised to see his vision on very many issues in taking forward the ambitions of TSSA in the UK and in Sri Lanka.

It is always interesting and surprising to see when he come with plans with vision to have hospitality marquees, plan marquee locations, designing and erecting flag poles, preparing stage for presentation, plan catering for Sports Academy for North East – SANE project, plan musical events, plan recognising personalities, plan helpers dinner for some to mention few. His speeches and reports for meetings and AGM are being appreciated by everyone.

He has been TSSA founder member, secretary, vice president and president and was respected by everyone. He is founder of many organisation in Tellipalllai during his school days and now in the United Kingdom. As one of the founder of Mahajana College OSA UK he served as secretary and president for many years. He is part of Political, Sports, Social, Temple and Past pupil associations and give complete support to achieve the aims and objectives.

None of these could not have been achieved without the support and encouragement from his wife Jeyagowri and son Janagan. We all were always welcomed by Jeya and Janagan for very many meeting followed by dinner at his home.

He is always happy to be involved with many organisations and to meet various people from all walks of life to discuss different subjects and witness his contributions for many years to come.

**I wish him many more happy returns of the day**

**A Thiruketheeswaran (THIRU)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கெங்கா"

எனது இனிய நண்பர் 'கெங்கா' அவர்களுக்கும், எனக்குமிடையே இலங்கை அரசியல் குறித்து மிக நெருக்கமான உடன்பாடு உண்டு. அவரது எண்ணங்களோடு என்னால் பிரச்சனையின்றித் தொடர்வதற்கும் அதுவே காரணமாகும்.

எமது உறவுகள் என்பது ஒருமித்து, இணைந்து செயற்பட்ட காலங்கள் அதிகம் என்பதால் அப் பயணம் என்பது மிகவும் இனிமையாகவே ஆரம்பமாகியது. எமக்கு கல்வியாளரைச் சந்திப்பது, அவர்களது உரைகளைச் செவிமடுப்பது, ஏனையோர்களையும் அவற்றை நோக்கித் தள்ளுவது, அவ்வாறான மனிதர்களை அழைத்து விருந்தோம்பல் செய்வது என பல அம்சங்களில் ஒருமித்தே செயற்பட்டோம்.

80களின் பின்னர் இலங்கை அரசியல் பிரச்சனைகள் படிப்படியாக உக்கிரமடைந்து சென்ற வேளையில் பிரித்தானியாவில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்கள் பலர் இந்திய அரசியல் தலைவர்களுடன் நெருக்கமான உறவுகளை மேற்கொண்டனர். அதன் காரணமாக பல தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் பிரித்தானியாவிற்கு அழைக்கப்பட்டார்கள்.

உதாரணமாக 1982ம் ஆண்டளவில் அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற மாநிலமான "மசாசுசெட்ஸ்" நகரத்தில் வாழ்ந்த தமிழ் அபிமானிகள் பலர் அங்கு மாநாடு ஒன்றை நடத்தினர். அம் மாநாட்டிற்கு இலங்கையிலிருந்தும், தமிழ் நாட்டிலிருந்தும் பலர் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் நெடுமாறன், கோவை மகேசன், சந்திரகாசன், ஈழவேந்தன், பெருங் கவிக்கோ சேதுராமன் போன்றோர் சென்றிருந்தனர். இவர்கள் நாடு திரும்பும் வழியில் இலண்டன் வந்தபோது அவர்களை அழைத்து ஈஸ்ற்காம் நகரில் கூட்டம் ஏற்பாடு செய்த வேளையில் ' கெங்கா' மிகவும் உதவியாக செயற்பட்டார்.

இந்தக் கூட்டத்தில் ஏற்பட்ட அந்த நெருங்கிய உறவு இன்றுவரை வலுவாக தொடர்கிறது. இக் காலப் பகுதியில் எமது தமிழ் தலைவர்களான சிவ சிதம்பரம், அமிர்தலிங்கம், எட்மன்ட் சமரக்கொடி போன்றவர்களும் ஆயுதக் குழுக்கள் தோற்றமடைவதற்கு முன்னைய காலப் பகுதியில் அழைக்கப்பட்டு பாரிய கூட்டங்களை ஏற்பாடு செய்வதில் இருவரும் உழைத்தோம்.

1977ம் ஆண்டின் பின்னரான காலப் பகுதியில் இலங்கை அரசியல் நிலவரங்கள் தொடர்பான விவாதங்கள் ஆங்காங்கே நடைபெறும். குறிப்பாக இலண்டன் நகரின் மத்தியில் அமைந்துள்ள 'இந்தியா கிளப்' என்ற உணவு விடுதியில் இவ்வாறான சந்திப்புகள் நடைபெறும் வேளையில் நாமிருவரும் தவறாமல் செல்வோம்.

காலப் போக்கில் இலங்கை நிலவரங்கள் தீவிரமடைந்து சென்ற வேளையில் தென்ஆபிரிக்க தேசிய தலைவர் நெல்சன் மண்டேலா அவர்களை சிறையிலிருந்து விடுவிப்பதற்கான ஆர்ப்பாட்டங்களும் அதிகரித்திருந்தன. இதன் விளைவாக "Eelam Solidarity Campaign - ESC" என்ற அமைப்பு இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையைச் சர்வதேச மயப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்ப நிர்வாகத்தில் தலைவராக காலம் சென்ற கலாநிதி ஆறுமுகம் அவர்களும், 'கெங்கா' செயலாளராகவும், நான் அதன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டோம்.

இக் காலப் பகுதியில் இலங்கையில் குறிப்பாக 1983ம் ஆண்டு பாரிய இனக் கலவரம் ஏற்பட்டது. இக் கலவரம் புலம்பெயர் நாடுகளில் பெரும் கோபத்தையும், ஏமாற்றத்தையும் அளித்தது. இப் பின்னணியில் 'கெங்கா' தலைமையிலான ESC அமைப்பு மாபெரும் கண்டன ஊர்வலத்தை நடத்தியது. இந்த ஊர்வலத்தில் பிரித்தானியாவிலுள்ள இலங்கையர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சனையில் தமது கரிசனையைத் தெரிவிக்கும் விதத்தில் பல சர்வதேச அமைப்புகள் (குறிப்பாக இந்திய சீக்கிய அமைப்புகள் உட்பட) அரசியல் கட்சிப் பிரமுகர்கள், ஆதரவாளர்கள், தொழிற்சங்கவாதிகள் எனப் பல தரப்பட்ட பிரிவினர் கலந்து கொண்டனர். இதனை அவ்வளவு சிறப்பாக நடத்த உதவியவர்களில் 'கெங்கா'வும் ஒருவராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகளிடையே இணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் 'கெங்கா' இன் இல்லத்தில் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் சார்பில் திரு. பாலசேகரம் அவர்கள் கலந்துகொண்டிருந்தார். இருப்பினும் முயற்சிகள் வெற்றியளிக்க வில்லை.

'கெங்கா' வின் ஈடுபாடு பன்முகத்தன்மை வாய்ந்தது. விளையாட்டுத்துறை, பழைய மாணவர் சங்கம் என பல உண்டு. இக் கூட்டங்கள் பலவற்றிற்கு இருவருமே செல்வதால் அவரது கவனத்திலுள்ள Shooting Star Sports Club, TSSA, Mahajana OSA போன்றவற்றில் தனது பங்களிப்புத் தொடர்பாக பேசாத நாட்களே இல்லை எனலாம். பொது வேலைகளில் அவ்வளவு ஈடுபாடு அவருக்கு உண்டு. அத்துடன் இவ்வாறான பொது நிகழ்ச்சிகளுக்கு அவரது மொத்த குடும்ப உறவுகளும் இணைந்து சிற்றுண்டி வகைகள் தயாரித்து அங்கு பரிமாறுவார்கள்.

இவ்வாறு பொதுவாழ்வில் நிறைந்த ஈடுபாடு கொண்டுள்ள அதேவேளை தனது குடும்ப நிகழ்வுகளில் குறிப்பாக உறவினர்களை அழைத்து விருந்துபசாரம் செய்வது அவரது தனிப் பண்பு எனலாம். இவர் மாணவனாக இலண்டனுக்கு வந்த காலம் முதல் ஏதோ ஒரு வகையில் தனது குடும்ப உறவினர்களின் முன்னேற்றத்திற்கு உதவி வருகிறார். அவரது தாயையும் அழைத்து அவரது இறுதி நாட்கள் வரை மகிழ்ச்சியோடு வாழ்வதை உறுதி செய்திருந்தார

1993ம் ஆண்டு எனது இல்லத்தில் இலண்டன் சிவன் கோவில் அமைப்பதற்கான ஆரம்பக் கூட்டம் இடம் பெற்றது. அக் கூட்டத்திற்கு 'கெங்கா'வும் அழைக்கப்பட்டிருந்தார். ஆரம்பகால அறங்காவலர்களில் ஒருவரான அவர், அந்த முதன்நாள் ஆரம்ப பூசை தினத்தன்று அங்கு வந்திருந்த சகலருக்கும் இன்முகத்துடன் தேவையான சமையல் வேலைகளையும் தாமே பொறுப்பேற்று அன்னதானம் வழங்கினார்.

தற்போது தனது தாய், தந்தையரை நினைவு கூரும் தினங்களின்போது உறவினர்களை அழைக்கத் தவறுவதில்லை. இவ்வாறான அழைப்பில் நானும் தவறாமல் அழைக்கப்பட்டுள்ளேன்.

மிகவும் இனப் பற்றும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான விடுதலைச் சிந்தனையும் உடைய அவர், தமிழ் மக்களின் கலாச்சார, சமய, சமூக நிகழ்ச்சிகளிலும் தனது முழுமையான பங்களிப்பை வழங்கத் தவறுவ தில்லை.

'கெங்கா' சுயமாகத் தொழில் புரிந்த காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி தனது வீட்டின் சகல திருத்த வேலைகளை மேற்கொள்வது, தனது வீட்டுத் தோட்டத்தில் தனது மனைவி, பிள்ளையுடன் இணைந்து மரக்கறி வகைகள் நாட்டுவது போன்றவற்றிலும் தனது பொழுதைக் கழிக்கத் தவறுவதில்லை.

'கெங்கா'வினது இப் பயணத்தில் பக்கத்துணையாக அவரது மனைவி ஜெயா, மகன் ஜனகன் மற்றும் சகோதரர்களின் பங்களிப்பு என்றும் ஒற்றுமையை அடையாளப்படுத்துகிறது.

எனது இனிய நண்பர் 'கெங்கா'வின் 70வது பிறந்தநாள் வைபவம் Covid-19 காரணத்தால் சிறப்புற நடத்த முடியவில்லையே என்ற ஆதங்கம் எம்மில் பலருக்கு உண்டு. இருப்பினும் அந்த இனிய நன்னாளை ஒட்டி வெளியிடப்படும் மலரில் எனது வாழ்த்துக்களையும் இணைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி

**ந. சச்சிதானந்தன்**

**08-12-2020.**

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை எழுபதை கொண்டாடும் அண்ணன் கெங்காதரன் அவர்களை வாழ்த்தி எழுதுவதில் நான் அக மகிழ்கிறேன்!

அம்பனை எனும் அழகிய கிராமத்தில் அவதரித்து , ஒரு எழுத்தாளராக , சமூக சேவையாளராக , அரசியல்வாதியாக , மகாஜனாவின் பற்றுள்ள மைந்தனாக உலாவரும் அண்ணன் கெங்காதரனுக்கு வயது எழுபது என்கிறார்கள் என்னால் நம்பமுடியவில்லை.

அண்ணன் கெங்காதரனின் குடும்பத்துடனான உறவு இன்று நேற்றல்ல நான்கு தசாப்தங்களுக்கு முற்பட்டது. அன்று தொடங்கிய உறவு இன்றுவரை தொடர்கிறது .நாங்கள் மகாஜனக் கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் எங்களது பெற்றோருடன் தெல்லிப்பழையில் வாழ்ந்தோம் .அக்காலத்தில் எங்களது குடும்பத்துடன் நெருக்கமாக இருந்தது மூன்று குடும்பங்கள் அதில் ஒன்றுதான் அண்ணனின் குடும்பம் . மற்றயது எங்களுக்கு அனைத்திலும் உதவியாக இருந்தது அருணாசலம் மாஸ்டரும் அவரது அண்ணன் பொன்னம்பலம் மாஸ்டரின் குடும்பமும்தான் .

அன்று எங்களின் உறவுக்கு பாலமாக திகழ்ந்தான் அண்ணனின் கடைக்குட்டி தம்பி சபேசன். பாடசாலை தவிர்ந்த நேரங்களில் அதிகமாக நேரத்தை அண்ணனின் வீட்டின் கொல்லை புறத்தில் சபேசனுடன் விளையாட்டில் கழித்துள்ளோம். அண்ணா உங்களது பெற்றோரும் , சகோதர சகோதரியர்களும் நீங்களும் எங்களுடன் அந்நியோன்யமாகப் பழகியதை இன்றும் எண்ணிப் பார்க்கிறேன்.

அண்ணன் கெங்காதரனைப் பார்க்கும்போதெல்லாம் இந்திய டெனிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ் கண் முன்னே தோன்றி மறைவார் .ஓங்கி உயர்ந்த மெல்லிய உருவம். எப்போதும் கைகளில் எதோ ஒரு புத்தகத்தை தன வசம் வைத்திருப்பார். நாங்கள் படிக்கின்ற காலத்திலேயே கெங்காதரன் அண்ணன் வெளிநாடு சென்றுவிட்டார்.வெளிநாடு சென்றாலும் கெங்காதரன் அண்ணனின் சிந்தனை எல்லாம் அவரது ஊரையும் கற்றபாடசாலையையும் தன சமூகத்தையும் சுற்றியே இருந்தது என்றால் அது மிகையாகாது.

மகாஜனக் கல்லூரியையும் நாகலிங்கம் ஐயாவின்அதாவது அண்ணன் கெங்காதரனின் குடும்பத்தையும் வேறுவேறாகப் பார்க்கமுடியாது அவர்கள் மொத்த குடும்பமே கல்லூரியுடன் இரண்டறக் கலந்துள்ளது. தசாப்தங்கள் உருண்டோடினாலும் மகாஜனக் கல்லூரியை நினைக்கும்போதெல்லாம் நம் கண்முன்னே தோன்றுவதெல்லாம் அண்ணன் கெங்காதரனும் அவரது குடும்பமும்தான்.தான் படித்த பாடசாலையின் மேல் கொண்ட காதலினால் மகாஜனக் கல்லூரியின் ஐக்கிய இராஜ்ய பழைய மாணவர் சங்க கிளையில் தன்னை இணைத்துக்கொண்டு தலைவர் பதவி உட்பட பலபதவிகள் வகுத்து தன்னால் முடியுமானவரை கல்லூரியின் வளர்ச்சிக்கு பாடு பட்டுக் கொண்டிருக்கின்றார்.

அண்மையில் என்னையும் எனது பாரியாரையும் மகாஜனக் கல்லூரிக்கு பிரதம அதிதியாக அழைத்திருந்தவேளை அதிபருக்கு முன்னராகவே பிரசன்னமாகி எம்மை வரவேற்று அகமகிழச்செய்தார்.அது மட்டுமின்றி அண்மையில் நடந்த தனது நாற்பதாவது திருமண நிகழ்விற்கும் எம்மை அழைத்து மீண்டும் அகமகிழச்செய்தார். .

அண்ணனும் அண்ணியும் தம் அருந்தவப் புதல்வனான ஜனகனுடன் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழவேண்டும். அதைப்போல் தன்கல்லூரிக்கும் , தன்சமூகத்திற்கும் , பிறந்த மண்ணிற்கும் மென் மேலும் சேவைகள் செய்ய வேண்டும் என வாழ்த்தி இந்த எழுபதாவது பிறந்தநாளை மட்டுமல்ல நூறாவது பிறந்தநாளையும் கொண்டாட இறைவன் அருள் புரியவேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

அன்புடன்

**சம்சுடீன் நியாஸ்**

மேலதிக சுங்க பணிப்பாளர்

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்'

எனது அன்புக்கும் மதிப்புக்குரிய அமரர் நாகலிங்கம் அண்ணர்.தனது பெயர் போலவே தனது மகனுக்கும் சிவனது நாமங்களில் ஒன்றான கெங்காதரன் என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தவர்.ஆண்டவன் சிவனது ஆசி, எழுபதாவது அகவையை எட்டிய அவருக்கு என்றென்றும் நிலைத்திருக்க இறைவனை வேண்டுவதுடன் அவரது தந்தையின் நிலையில் இருந்து எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் தான் அவதரித்த அம்பனை எனும் சிற்றூரின் சிறப்புகளை மறவாது, பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்துவதை அவதானித்துள்ளேன். அது அவரிடம் காணப்படும் சிறப்பியல்புகளில் ஒன்று.

அம்பனையின் மையத்தில் அமைந்தது மகாஜனக் கல்லூரி. அதன் அயலவராக இருந்து , கல்லூரியின் வளர்ச்சி வடிவங்களை அறிந்தவர் மட்டுமன்றி, பாடசாலையின் சிறப்புக்களை வெளிப்படுத்தும் ஒரு பழைய மாணவனாக பங்களிப்பு செய்து வருவதும் பாராட்டுக்குரிய ஒன்று.

இடதுசாரி இலட்சியத்தை இலங்கையில் தோற்றுவித்த இலட்சியவான்கள் பலர் பாதை மாறிப் பயணித்ததைப் பார்த்துள்ளேன். கெங்காதரன் அவர்கள் தான் ஏற்ற இடதுசாரி இயல்புகளில் தடம் புரளாமல் கடந்த பல ஆண்டுகளாக ஆதரித்து நிலைத்திருப்பது குறிப்பிடக்கூடிய ஒரு விடையமாகும். கெங்கா ஒரு பெரிய நட்பு வட்டத்தை கொண்டுள்ளதோடு சில அமைப்புக்களின் உயிர்த் துடிப்புள்ள உறுப்பினராகவும் இருப்பது இவரது சமூக சேவையின் வெளிப்பாடாகும்.

மேலே இவரது ஊர் அபிமானம், பாடசாலைப் பிணைப்பு, சமூக அக்கறை என்பவற்றை எடுத்தெழுதிய நான் இவர் ஒரு குடும்பத் தலைவனாய் தனது உறவுகளை தன் இறக்கைகளால் கட்டிக்காத்து வருவது ம் பலரும் விரும்பக்கூடிய ஒரு பண்பாகும்.

கெங்கா இன்னும் பல்லாண்டு வாழ்ந்து , மேற்கூறிய பணிகளுடன் மேலும் பல உயர்வான கைங்கரியங்களை கையாள நான் ஆசீர்வதிக்கிறேன்.

**செல்வத்துரை கதிர்காமத்தம்பி**
ஓய்வுநிலை ஆசிரியர்,
சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மனதெல்லாம் மாணிக்கம்'

இன்று 70 வது பிறந்த நாள் காணும் எனது நண்பன் கெங்காவிற்கு எனது மனமார்ந்த பிறந்த நாள் நல்வாழ்த்துககை தெரிவித்துக் கொள்கிறேன். கெங்காவை 'மனதெல்லாம் மாணிக்கம்' என்பதுக்கான காரணத்தை பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.1975 ம்ஆண்டு நான் யாழ்ப்பாணத்தில் கட்டிடப்பொருள் கூட்டுதாபனத்தில் வேலை செய்யும் போது நண்பன் சிவலிங்கம் ஊடாக எமது சந்திப்பு ஆரம்பமானது.யாழ் கச்சேரியில் கெங்கா வேலை செய்திருந்தாலும் எங்கள் அலுவலகத்திற்கு சிவலிங்கத்தை சந்திக்கவரும்போது 5,6 முறை கலந்துரையாடியிருப்போம். நாட்டு நிலமை மோசமடைய, 75ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கெங்கா லண்டன் சென்றுவிட்டார். இதன்பின் சில வருடங்களில் நண்பன் சிவலிங்கமும் லண்டன் சென்றுவிட்டார்

1986 ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று நானும் எனது குடும்பமும் இந்தியாவிலிருந்து பம்பாய் விமான நிலையமூடாக லண்டன் செல்ல விமானத்திலிருந்தபோது பின் இருக்கையிலிருந்த சகோதரி என்னை அழைத்து நீங்களும் லண்டன் போகிறீர்களா என கேட்டார். அடையாளம் தெரியாதபடியால் பதில் சொல்ல தயங்கினேன். எனது நிலமையை புரிந்து தான், கெங்காவின் சகோதரி பாப்பா என நினைவுபடுத்தினார். அவர் கேட்டார் யார் உங்களை பொறுப்பெடுக்க விமானநிலையம் வருவார்கள் என்று. அதற்கு முகவர் வருவார் என சொன்னேன். அவர் வரமாட்டார் என்று சொன்னார். லண்டன் வந்து சேர்ந்து அகதிக் கோரிக்கை கோரியபின் எங்களை பொறுப்பேற்க யாரும் இல்லை என்ற காரணத்தால் அகதி முகாமிற்கு அனுப்புவதற்காக குடிவரவு அதிகாரி எங்களை ஒரு இடத்தில் அமரவைத்தார். அப்போதுதான் 'மனெதல்லாம் மாணிக்கம்' என்று சொல்லும் கெங்கா நாங்கள் இருக்குமிடத்தை கடந்து செல்லும் போது சகோதரி பாப்பா நாங்கள் இருப்பதைத் தெரியப்படுத்தினார். கெங்கா அருகில் வந்து உடனடியாக என்னை குடிவரவு அதிகாரியிடம் அழைத்து சென்று எம்மையும் தான் பொறுப்பு எடுப்பதாகக் கூறினார். அதற்கு குடிவரவு அதிகாரி சில நாட்களுக்கு முன் உன் தம்பியை பொறுப்பு எடுத்து இன்று உன் சகோதரியை பொறுப்பெடுத்தது, இனி உங்கள் வீட்டில் மேலதிகமாக ஆட்கள் தங்க இடவசதி இல்லை என கூறி மறுத்துவிட்டார். அதற்கு கெங்கா 10 வருடத்திற்கு பின் நண்பைன சந்தித்து விட்டு இந்த நிலமையில் விட்டுச் செல்ல முடியாது வேறு தங்குமிடம் ஒழுங்கு செய்கிறேன் என்று கூறி வேறு வீட்டு விலாசம் கொடுத்து எங்களைப் பொறுப்பெடுத்தார். பின் தனது காரில் அழைத்து சென்று நணபர் சிவலிங்கத்திடம் அவர் வேலை செய்து கொண்டிருந்த எரிபொருள் நிலையத்தில் ஒப்படைத்தார். என்னையும் மனைவி மற்றும் எனது ஒரு வயது மகளையும்கண்ட சிவலிங்கம் ஆச்சரியம் அடைந்தார். அதன் பின் எல்லோரையும் ஒழுங்கு செய்த வீட்டிற்கு தனது காரில் கொண்டு போய் விட்டார். அன்றிலிருந்து நாங்கள் கனடா (1990) வரும்பரை குடும்ப நண்பனாக அவரும் அவரது மனைவி ஜெயாவும் பல உதவிகள் செய்தார்கள் அதனால் தான் கெங்காவை 'மனெதல்லாம் மாணிக்கம்'என்று அறிமுகம் செய்தேன் . இவர் பல்லாண்டு வாழவேண்டும் என நான் வணங்கும் கதிரமலைக் கந்தனிடம் பிராத்திக்கின்றேன். வாழ்த்து செய்திக்குச் சந்தர்ப்பம் தந்த ஜனகனுக்கும் நன்றி.

**இரத்தினம் கதிரமலைநாதன்**
கனடா
21/12/2020

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Messages from Nieces and Nephews

Dear Mama,

HAPPY 70th BIRTHDAY! Or how we like to call it, 20 but with 50 years of experience. Thank you for being such a wise and caring family man. You always seem to have a way of making us question the world, look for the good and justice in everything and always bring it back to how important family is. Thank you for being such a great husband to our mami and a great father to Jay. We appreciate you so much and we know we have much more to learn from you. We wish you the best in the birthdays to come and in your health. Don't ever stop being our favourite Mama.

Love,
Jeneka and Nijaan
From Jeneka and Nijaan Navaranjan

---

## Thas Family

On your 70th birthday, we pray for your good health, lots of laughter and a wonderful life with your loved ones beside you! Happiest Birthday Manon Chiththappa!

With love,
Thas and Family - From Thas, Jenny, and Children
Happy Birthday Manon Uncle.

---

## Methilan

We learnt the true meaning of friendship and being there for family from you. We will always be there for you. I hope you always remember how much you mean to us, and how much of an impact you have on the lives of everyone around you. Here's to an unforgettable celebration and all great things in the year ahead!
Aththan & family Shanthan & family Kannan & family
Uthayan & family Easwaravel & family

---

## Message from Reshi

Happy Birthday Manon Mama also known as Mr Mahajana, Juicy fruits, Mr come onnnnn but to me as the most calmest uncle I know.

While growing up and even now, you have always been the go to person for all of our parents and for that alone us cousins have to be extremely thankful.
One story that not many people know; is that when I was just born and my parents were looking for a house, my Dad's mates were tempting him to move to East Ham(Ayoo imagine that), you were the one that said no and found us a temporary accomodation in Southend Lane and moved us in. Now me being 27 and that gesture a life time ago, it may seem minor but for me personally was one of the most life changing things you could've done. It allowed many memories growing up with the mox family.

**From Reshi**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Msg from Nivi & Kajanthy

**மனோன் மாமா!**

*1995ல் ஒரு நாள் அம்மா சொன்னவா மனோன் மாமா லண்டனிலிருந்து வாறார் என்று. என்னுடையதும் தங்கச்சி கயந்தி உடையதும் மிக முக்கியமான பாடசாலை சார்ந்த வயதில் மிக முக்கியமான சமூகம், சபை, அறிமுகம் இல்லாத இடத்திலும் எவ்வாறு எங்களை அறிமுகப்படுத்துவது, ஒரு விழாவை எவ்வாறு கொண்டு நடத்துவது, மனிதர்களை எவ்வாறு கையாள்வது, இப்படி பலப்பல வாழ்க்கைக்கு தேவையான விடையங்களை எங்களுக்கு தன்னுடைய வாழ்க்கையில் நடந்த உதாரணங்களை வைத்து சொல்லித் தந்தார்.*

*நிறைய விடையங்கள் எழுதலாம் ஆனால் இடம் இல்லை மனோன் மாமாவுக்குத் தெரியும்.*

*நன்றி சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம். நன்றி மாமா எங்கள் பிள்ளைகளுக்கும் உங்களைப்பற்றி சொல்லுவோம்.*

*எழுபதாவது பிறந்த தின வாழ்த்துக்கள் மாமா. நூறாண்டு வாழவேண்டும்*

*உங்கள் பாசத்திற்குரிய*
**நிவியும் கயந்தியும்**

---

## Dearest Genga Mama/Thatha,

Wishing you the happiest of birthdays this year! 70 amazing years filled with laughter, love, and tears. 70 amazing years of life you've learned, respect you've earned and many lives you've touched, and turned for good.

An amazing father, husband, son, brother, friend and most importantly a kind and loving uncle to us all!

May god bless you abundantly and grant you everything that you ever wished for on your special day!

All our love & blessings,

**Dasan, Priya, Anjana, Aajay & Jaiden xxx**

---

## Happy 70th Birthday Genga Mama!

Thank you for being a loyal friend to my dad and an uncle to us all these years. We're lucky and grateful that you're always there for our family. Your journey so far has been incredibly inspiring and we're all excited to see what you do next! Here's to more happiness and health. Enjoy your celebrations and don't forget to keep smiling (while you still have teeth )

From
**Nelson**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Many Happy Returns of the day Genga maama

You have been a constant presence in our lives from before we were born, during our childhood and still to this present day.

You have been a wiser, older brother figure to our father and you have massively blessed our family with your kindness. My brothers and our families hold you in such high esteem.

From being the first person Appa met at the airport when first arriving in the UK, helping him launch his first business, sponsoring our older cousin to live a better life here & even supplying the catering to Dash's wedding!... This is just a very small list of examples of how close you are to us and it is testament to your kindness, generosity & selfless service to your family, friends and wider community.

When I think of a pure hearted soul who's prime motive in life is to serve others, I think of you. When I think of a man who's so proud of his motherland, I think of you. When I think of a person who has indirectly and positively shaped the course of my life, I think of you.

**We wish you the very best of everything. May God continue to bless you.**

Lots of love from

**Jonathan, Karthiga & Seyon xx**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Janagan's Friends

## Msg from Dashan family

Dearest Genga Mama/Thatha,

Wishing you the happiest of birthdays this year! 75 amazing years filled with laughter, love, and tears. 75 amazing years of life you've learned, respect you've earned and many lives you've touched, and turned for good.

An amazing father, husband, son, brother, friend and most importantly a kind and loving uncle to us all!

May god bless you abundantly and grant you everything that you ever wished for on your special day!

All our love & blessings,

**Dasan, Priya, Anjana, Aajay & Jaiden xxx**

---

## Msg from Rothin

### Message for your Dad

Hello Uncle, Hearty Congratulations on your 70th Birthday. Wishing you good health, abundant happiness and great prosperity for 2021 and beyond. You have lived through and seen with your eyes a great number of changes in the world. Your lived experience and many lessons learnt are an invaluable source of knowledge that this generation and future generations will benefit from. Hope you have a great birthday until we meet again sometime in the future.

Regards

**Rothin**

---

## Msg from Kansu

Happy 70th Birthday uncle!! Hope you have the best day, wishing you many more years of good health, love and joy!! And may you see Liverpool lift the premiere league in many years to come!!

**YNWA Kansu**

---

## Msg from Ruch

Happy 70th Birthday Uncle!! Hope you have a wonderful day and many happy returns!

Regards

**Ruch**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Msg from Janagan

To a man whom I do not always get along with, who frustrates me daily, whom I don't always agree with, and whom I argue with all the time.

And yet; whom I love dearly, whom I respect whole heartedly, whom I trust completely, and whom I know as Dad.

Congratulations on reaching this incredible milestone. 70 years of age.

Firstly, I want to say thank you, and I love you, as we do not say it to each other that often.

As I get older, I am appreciative of the family I have, and the man you are and how you have raised me to become the man that I am.

I may not always agree with you, but at almost 37 years of age, I am still dependant on you, for your advice, guidance, and unbelievable support that only a Father like you can give a son like me.

For the entirety of my life, I have been told of how great a man you are by all manner of people. I have watched your bravery against all odds, to stand up for what you believe in, and to never take the easy route out, and I have tried, not always successfully to up still these characteristics within me.

Your community work and politics will be a legacy left behind for generations, but not many here will be able to share personal memories away from these topics. Genga and Manon are how most people know you as, but to me, you are simply… Dad.

I have many fond memories of you and me from when I was extremely young until today. From putting me on your shoulders every Christmas as we walked through the streets of London adorned with Christmas Lights, eating piping hot roasted chestnuts. I was always amazed by the magical lights, and how you made me look forward to this every single year. And still count this as some of the best memories in my life. To waking up so early that the birds had not woken up, year after year, to accompany you to TSSA sports day, and support you there. And at the end of those nights, we would end up at a restaurant in Southall with all your other comrades and friends, as we enjoyed a well-deserved good meal. There were times when during the holidays I would come and see you when you worked in Leicester, Evesham, Dunhampton, and countless other places in the Midlands, and I loved every second of those memories. I can write many, pages of memories and still not have enough pages to write in.

But it was your love of sports that rubbed off on me most. Especially when I followed in your footsteps, as did the rest of our family in supporting Liverpool Football Club, and with that being said; I am glad that I got the chance to let you see them live at Anfield 10 years ago.

In 1995, at the age of 11, I remember watching the League cup final with you, as we beat Bolton Wanderers in the final. You were so happy, but I had little interest in football. Fast forward a year later and yet another final against Manchester United, this time in the FA Cup. I was so nervous and couldn't watch the game at times, and on the 85$^{th}$ minute Eric Cantona scored the only goal of the match. Liverpool lost, and so I started to cry. You told me that this was life, and it's never over, we had to try again, and that we will go again the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

following year. But I was crushed, I could not stop crying, and so my Love for Liverpool Football Club started from here, and your life lessons took on a whole new meaning.

And 30 years on from the last time you saw them do it, I got to experience all the stories that you raised me on about the mighty reds. We got to see them become European Champions, World Champions and English Champions. A moment, and happiness I hope one day I can share with my own children.

Many may not know this, but I know you long to go back to Sri Lanka and live the rest of your life in your homeland which you have always told me; and it is clear to see when your face lights up as you recall stories from your childhood. Until then, there are some amazing things to come on the horizon for you and our family. Let today be the start of some wonderful celebrations and good fortune for you and our family.

As a young child, until today, I have always wanted to make you proud. But when you are the son of Nagalingam Srigengatharan, that often feels like the hardest task in the world.

I could never have got through life without your support, and guidance, and the milestones I reached were yours too; my degrees, my qualifications, the challenging times, the best of times, and all that I accomplish even now, are because of the lessons and footprints that you have left on my life.

In short, I hope that I have made you proud. I will do my best in life, and regardless of the good and bad times that make every life, I will always remember, as you once told me when I was 13 years old at the airport, before I flew off to Canada for my uncle's funeral; when I feel upset, scared, or unsure in life, "remember in your heart, that you are the son of Nagalingam Srigengatharan".

Long may you continue to inspire those around you of what it takes to be remarkably courageous

Long may you teach those around you that aspire to be like you, the unbelievable self-belief you hold.

Long may you show the world the right path, by always fighting with love in your heart for what is right and just

And long may you live to make this world and my world a better place, for now and forever.

Thank you for all that you have done, all that you are, and all that you continue to give me and all those that you bless with your presence in their life.

With all my prayers, my hopes, my respect and love, on this of all days, I wish you, good health, fortune, love and happiness on this the happiest of birthdays.

**With Love,**

**Your son,**

**Janagan Srigengatharan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றி**

குறுகிய காலத்தில் நூலை வடிவமைத்தவர்:
**ஓவியர் கே கே ராஜா**

அட்டைப் படம்:
**சாந்தன் (S. சாந்தகுணம்)**

**வாழ்த்துச் செய்திகளை வழங்கியவர்கள்**

நூலாக்கத்திற்கு உதவிசெய்த
**இ. பத்மநாப ஐயர்**

அச்சிட்ட Setline data Ltd

பின் அட்டை:
1984 ஜூலையில் லண்டனில் இடம்பெற்ற
பிரமாண்டமான ஊர்வலத்தின் இறுதியில் எடுக்கப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org